வார இதழ்
# தேசியம்
THESIYAM ජේසියම්
www.thesiyamnews.com




மலர்: 01 | இதழ்: 11 | வள்ளுவர் ஆண்டு 2054 | 10.11.2023 - 17.11.2023 | பக்கங்கள்: 16 | ஊக்குவிப்பு: 80/=



# வடக்கு கடலை சீனாவிற்கு வழங்க தீவிரம் காட்டும் இலங்கை

## ‘எங்களை காப்பாற்றுங்கள்’ இந்தியாவிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை!

இலங்கையின் கடற்பரப்பிற்குள் அத்துமீறிய இந்திய இழுவை படகுகளின் சட்டவிரோத எல்லை தாண்டலைக் கட்டுப்படுத்தும் வகையில் வடக்கு கடலை சீனாவிற்கு வழங்க இலங்கை கடற்றொழில் திணைக்களம் முனைகின்றது.இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்படுவதுடன் இந்த அழிவிலிருந்து தம்மை காப்பாற்றுமாறு இந்தியாவிடம் வடக்கு மீனவர்கள் கோரியுள்ளனர்.

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் வடமராட்சி ஊடக இல்லத்தில் வடபகுதி மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே

பக்கம் 15



## இந்தியா- சீனாவின் பலப்பரீட்சைக் களமாக பாக்கு நீரிணை மாறுமாயின் முதலில் அழிவது ஈழத் தமிழர்கள் தான்

பக்கம் 15



## தமிழ்த் தேசிய இளையோரை இலக்கு வைக்கும் அரசாங்கம்

பக்கம் 15



## சிங்கள மக்களின் தலைவனாகவே ரணில் தன்னை காட்ட முயல்கிறார்

பக்கம் 15



# இலங்கையில் இருந்து ஈழத் தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம்

ஈழத் தமிழர்கள் தாம் இழந்து போன இறைமையை மீட்டெடுப்பதற்காக நடாத்திய ஆயுதப் போராட்டத்தில் தமிழ் இனத்தின் கொள்ளளவுக்கு மிஞ்சிய அளப்பெரும் தியாகங்களை செய்தார்கள், சொல்லொணா துன்பங்களை சுமந்தார்கள்.

ஈற்றில் முள்ளிவாய்க்காலில் போரவலத்தையும், பேரழிவையும் சந்தித்து போராட்டத்தில் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் சர்வதேச ரீதியாக தமிழ் மக்கள் ஓர் அரசியல் போராட்டத்தை நடத்தவும், சர்வதேச தலையீடுகளுக்கு ஊடாக தமக்கான நீதியைப் பெறுவதற்குமான வாய்ப்புகள் தொடர்ந்தும் இருக்கின்றன.

ஆனாலும் இந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தமது தாயக பூமியில் தொடர்ந்து வாழ்ந்திட வேண்டும்.

இல்லையேல் தமிழ்மக்கள் தமது தேசிய அபிலாசையை வென்றெடுக்க முடியாது. அத்தகைய ஒரு துயரமான நிலை இப்போது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இருந்து ஈழ தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம் அதுதான் ஈழத் தமிழரை நலிந்து போகச் செய்யும் ரணில் விக்ரமசிங்கவின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற பெயரில் ஈழத் தமிழரை தாய் நிலத்திலிருந்து அகற்றி வெளிநாடுகளில் குடியேறச் செய்யும் நாசகார திட்டம்.

சிங்கள பௌத்தத்தின் புனித நூலான மகாவம்சத்தில் வெளிப்படுத்தப்படும் தம்தீப கோட்பாடு என்பது இலங்கையை முற்று முழுதாக சிங்கள பௌத்த நாடாக மாற்றுவது.

இதன் அடிப்படையிற்தான் இன்று இலங்கையின் பௌத்த பேரினவாதம் உலகளாவிய அரசியலில் மிகத் தந்திரமாக காய்களை நகர்த்தி வருகின்றது.



அதன் அடிப்படையில் வட-கிழக்கில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் வாழும் வரைக்கும்தான் இலங்கை தீவில் இந்தியாவின் தலையிடும் செல்வாக்கம் இருக்கும். இதனாற்தான் ஈழத் தமிழர்களை சிங்களப் பேரினவாதம் இனப்படுகொலை செய்கிறது. அதன் மூலம் இலங்கை தீவில் இருந்து ஈழத் தமிழர்களை வெளியேற்ற முயல்கிறது. இந்தியத் தலையீட்டை தடுக்கவும் திட்டமிடுகிறது.

## புவிசார் அரசியல்

இந்தப் பூமிப் பந்தில் வாழும் அனைத்து ஜீவராசிகளும் தமது வாழ்வுக்காக இயற்கையுடன் இடையூறாது போராடுகின்றன.

மனிதனும் ஒரு ஜீவராசி என்ற அடிப்படையில் அவன் இயற்கையுடன் மாத்திரம் அல்ல மனித சமூகத்திற்கு இடையேயும் ஓயாது போராட வேண்டியுள்ளது.

ஜீவராசிகள் இடத்துக்காக போராடுகின்றன, உணவுக்காக போராடுகின்றன, பாலியல் இனச் சேர்க்கைக்காக போராடுகின்றன. இவை ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை.

இலங்கையில் இருந்து ஈழ தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. எனினும் இடத்திற்கான (நிலத்திற்கான) போராட்டமே அதி முக்கியத்துவம் வாய்ந்தது. தனது இருப்பிடத்தை இழந்து எந்த ஜீவராதியும் நிலைபெற முடியாது. அந்த அடிப்படையில் பிராணிகளும்சரி மனிதனும்சரி தன்னுடைய இடத்தினை பாதுகாப்பதற்கான போராட்டமே மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

சிங்கங்கள் தாம்வாழும் பிரதேசத்துக்குள் மாற்று சிங்கக் கூட்டங்கள் நுழைவதை அனுமதிக்காது. காகங்களும் அப்படித்தான். சிறிய குருவிகளும் தங்கள் கூட்டை நோக்கி புழு பூச்சி பிராணிகள் வருவதையும் அனுமதிக்காது. புழுக்கள்கூட தம்முடைய கூட்டை பாதுகாப்பதற்காகவே போராடும்.

ஆக ஒவ்வொன்றும் தான் வாழும் சூழலை பாதுகாப்பதற்கு உயிர்கள் அனைத்தும் போராடுகின்றன. தான்வாழும் சூழலின் எல்லைகளைவகுத்து அவை தமக்கான ஒரு பாதுகாப்பு வளையத்தை வடிவமைத்துக் கொள்கின்றன.



> இலங்கையில் இருந்து ஈழத் தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம் அவ்வாறே அமெரிக்க கண்டங்களும் ஐரோப்பியர்களால் அங்கு வாழ்ந்துவந்த செவ்விந்தியர்களை அழித்து அமெரிக்க நாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறே கிருமியாவில் பெருந்தொகை ரஷ்யர்களை குடியேற்றியதன் மூலம் உக்ரைனிடமிருந்து கிருமியா பறிக்கப்பட்டுவிட்டது.



இத்தகைய உயிரிகளின் பாதுகாப்பு வளையம்தான் இன்று உலகளாவிய அரசியலில் புவிசார் அரசியல் என அழைக்கப்படுகிறது. எனவே இலங்கையின் அமைவிடம் காரணமான நிலைபெற்று இருக்கின்ற புவிசார் அரசியலை மாற்றி அமைப்பதற்கு கையாளப்படுகின்ற முறியடிப்பு தந்துரோபாயம்தான் சிங்கள குடியேற்றம், நிலஅபகரிப்பு என்பவற்றை உள்ளடக்கிய அரசியல் புவியியல் ஆகும்.

## அரசியல் புவியியல்

இயற்கையாக இருக்கின்ற நிலைமைகளை தமது அரசியல் தேவைக்காக மாற்றி அமைத்து புதிய சூழல் ஒன்றை தோற்றுவிப்பதுதான் அரசியல் புவியியலாகும்.

உதாரணமாக ஆபிரிக்க கண்டத்தைச் சுற்றி இந்து சமுத்திரத்திற்கு வருவதற்கான பாதையை சுயஸ் நிலத்தொடரை வெட்டி மத்தியதரக் கடலையும் செங்கடலை இணைப்பதன் ஊடாக குறுகிய நேரத்துக்குள் இந்து சமுத்திரத்துக்கு வருவதான பாதை தோற்றுவிக்கப்பட்டது.

இது ஒரு அரசியல் புவியியல். அவ்வாறே ஆஸ்திரேலியா கண்டத்தில் வாழ்ந்த பூர்வீக குடிகளை அழித்து ஆங்கிலேயர்களை குடியேற்றியதன் மூலம் ஆங்கிலேய அவுஸ்திரேலியா தோற்றுவிக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து ஈழ தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம் அவ்வாறே அமெரிக்க கண்டங்களும் ஐரோப்பியர்களால் அங்கு வாழ்ந்து வந்த செவ்விந்தியர்களை அழித்து அமெரிக்க நாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறே கிருமியாவில் பெருந்தொகை ரஷ்யர்களை குடியேற்றியதன் மூலம் உப்ரைனிடமிருந்து கிருமியா பறிக்கப்பட்டுவிட்டது.

இதுவும் அரசியல் புவியியல் என்பதற்குளே அடங்கும். திபேத்தில் பெருந்தொகை சீனர்களை குடியேற்றி தீபத்தின் குடுத்தொகையில் சீனர்களின் தொகையை அதிகரிக்கச் செய்ததும் அரசியல் புவியியல் என்பதற்குள்ளே அடங்கும்.

அவ்வாறே இலங்கை தீவில் காலனித்துவ காலத்தில் பெருந் தோட்ட. பயிர்ச் செய்கைக்கு பெருந் தொகையான தொழிலாளர்கள் தேவைப்பட்டபோது சிங்களவர்கள் தொழிலுக்கு வர மறுத்தனால் ஆங்கிலேயர்களால் தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை மலையகத்தில் குடியேட்டியதும் அரசியல் புவியியலே. அதே நேரத்தில் மலையகத்தில் தமிழர்களுடைய தொகையை குறைக்க வேண்டும் என்பதற்காக இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் மலையகத் தமிழர்களின் குடியுரிமையை பறித்ததும் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் நான்கரை இலட்சம் தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டதுவும் அரசியல் புவியியலே.

அவ்வாறே அம்பாறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட சிங்கள குடியேற்றத்தால் தமிழர் தாயகம் வெட்டி எடுக்கப்பட்டு கபளீகரம் செய்யப்பட்டதும், அல்லை, கந்தளாய், மணலாறு எனதமிழர்தாயகத்தின்தொடர்ச்சியை வெட்டி கூறுபோடும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்ட அரசியல் நோக்குக்காக செய்யப்பட்டவை என்ற அடிப்படையில் அரசியல் புவியியல் என்ற கோட்பாட்டுக்குள் அடங்கும்.

இவ்வாறு திட்டமிட்டு உருவாக்கப்படுகின்ற சிங்களக் கொடியேற்றம் நிலஅபகரிப்பு என்ற அரசியல் புவியியலால் தமிழர்களின் புவிசார் அரசியலை மேவி வெற்றிகொள்ள முடியும். இதனை சிங்கள தேசம் வலுவாக நம்புகிறது. அதனையே நடைமுறைப்படுத்துகின்றது. தமிழர்களை வெற்றி கொள்வதன் மூலம் இந்தியாவையும் வெற்றி கொள்ள முடியும். இந்த இரண்டு இலக்புகளையும் நோக்கியே இலங்கை அரசு தொடர்ந்து வெற்றிகரமாக நகர்ந்து செல்கிறது.

## நிலமும்-மக்களும்-அரசும்

பொதுவாக உலகளாவிய அரசியலில் அரசு என்ற ஒன்று நிலை பெறுவதற்கு அதற்கு மக்கள், நிலம், அரசாங்கம். இறைமை ஆகிய நான்கு கூறுகளும் இன்றியமையாதவை.

இந்த நான்கில் ஏதேனும் ஒன்று இல்லையேல் அது அரசாக பரிணமிக்க முடியாது. ஈழத் தமிழர்கள் நடத்திய ஆயுதப் போராட்டத்தில் ஒரு அரைகுறை அரசை உருவாக்கியிருந்தனர்.

இலங்கையில் இருந்து ஈழ தமிழரை புலம்பெயர் நாடுகளுக்கு கடத்தும் மற்றுமொரு திட்டம் அந்த அரைகுறையரசு நிலத்தையும், அரசாங்கம் என்று சொல்லத்தக்க ஒரு நிர்வாக இயந்திரத்தையும், அந்த இயந்திரத்தின் ஊடாக மக்களை நிர்வகிக்க கூடிய அதாவது இறமையையும் நமது கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் கொண்டிருந்தனர்.

ஆனால் சர்வதேச அங்கீகாரம் என்ற ஒன்றை அது பெறவில்லை. ஆனால் இப்போது ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்ட. போது தமிழர்களால் சிறுகச் சிறுக உருவாக்கப்பட்ட நிர்வாக, அதிகார, சமூக கட்டமைப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன.

அத்தோடு பெருந் தொகை தமிழ் மக்கள் கொல்லப்பட்ட விட்டனர். யுத்தம் முடிவடைந்த நிலையில் பெருந் தொகை மக்கள் நாட்டை விட்டும் வெளியேறி விட்டனர்.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் மக்களின் தொகை வெகுவாக குறைய தொடங்கிவிட்டது. யுத்த வெற்றியை பயன்படுத்தி தமிழர் தாயக நிலம் சிங்கள குடியேற்றங்களால் கபளீகரம் செய்யப்படுகிறது. இன்றைய சர்வதேச சூழமைவில் தாயகத்தைவிட்டு வெளியேறும் ஈழத் தமிழர்கள் மீண்டும் தாயகத்துக்கு வருவதற்கான எந்த சந்தர்ப்பமும் கிடையாது.




யூதர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக தமது தாயக நிலப்பரப்பான இஸ்ரவேலை விட்டு வெளியேறி ஐரோப்ப கண்ட நாடுகளில் வாழ்ந்தார்கள்.அந்த நாடுகளில் அவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது அவர்கள் சென்று குடியேறிய நாடு ஒன்றில் அவர்களால் தங்களுக்கான ஒரு நாட்டை அமைக்க முடியவில்லை.

அடுத்த வாரம் தொடரும்...

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி: +94 76 567 3339
மின்னஞ்சல்: thesiyamnews@gmail.com
இணையம்: www.thesiyamnews.com



# "வளர்த்த கடா மார்பில் பாய்ந்த" கதை

**வளர்த்த** கடா மார்பில் பாய்ந்த கதையை எங்களுடைய வாசகர்களுக்கு புதிதாக சொல்லத்தேவையில்லை.வளர்த்த பிள்ளைகள் பெற்றோரை எதிர்ப்பதற்கு உவமையாக இந்த மொழியை எங்களுடைய மூதாதையர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம்.இன்று பெரிதளவில் இந்த உவமை சொல்வதை கேட்கமுடிவதில்லை.ஆனால்,இன்று இந்த உவமையை மீண்டும் ஞாபகப்படுத்துவதாக ஒரு சம்பவம் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இடம்பெற்றிருக்கிறது. 2010ஆம் ஆண்டு சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக்கி அரசியல் முகவரி கொடுத்து அழகு பார்த்த இரா.சம்பந்தனுக்கு 13 வருடங்கள் கழித்து வெகுமதியான ஒரு நன்றிக்கடனை சுமந்திரன் வழங்கி அழகு பார்த்திருக்கிறார்.

ஆம்,அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த சுமந்திரன், 'பாராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையினால் செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்யமுடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது பதவியை துறக்க வேண்டும். 288 பாராளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருக்கின்றார்.அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 வீதமாக உள்ளது.அவ்வாறான நிலையில் அவருக்கு பாராளுமன்ற சம்பளமாக 4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக 4இலட்சத்து 19 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனை கொண்டிருக்கின்றோம். எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்து' என்று தெரிவித்திருந்தார்.

இது ஒரு விதத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள் குறிப்பாக பாராளுமன்றத்தை அலங்கரித்த – அலங்கரித்துக்கொண்டிருக்கின்ற பிரதிநிதிகளால் தமிழர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள் தொடர்பில் சிந்திப்பது அவசியம்.சம்பந்தன் முதுமை காரணமாக வீட்டுக்குள் முடங்கியிருக்கிறார்.ஆனால்,பாராளுமன்றம் செல்லும் தலைவர்கள் தமிழ் மக்களுக்காக சாதித்தவை என்ன என்பதை சுமந்திரனால் பட்டியலிட முடியுமா?தமிழர் தாயகத்தில் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு சிங்கள–பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல்,பௌத்தவாதிகள் சுதந்திரமாக தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.அம்பாறையையும், திருகோணமலையையும் ஏறத்தாழ முழுமையாக கபளீகரம் செய்துள்ள சிங்கள பேரினவாதம் மட்டக்களப்பை முழுமையாக கபளீகரம் செய்வதற்கான திட்டங்களை வெளிப்படையாகவும் அத்துமீறலாகவும் செய்து வருகிறது. தொல்பொருள் அடையாளங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த 164 இடங்கள் தற்போது 600 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு தமிழர் தாயகம் நாளுக்கு நாள் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில்,பதவி அரசியல்,போட்டி அரசியல், சிறுபிள்ளைத்தனமான அரசியல் செய்துகொள்வதிலிருந்து பின்வாங்குவதாக தெரியவில்லை.

மிகப்பெரிய மனித அவலத்தை கண்ட சமூகம், மிகப்பெரும் சேதங்களை கண்ட சமூகம்,நீண்டகாலம் மண்ணுக்காகவும் உரிமைக்காகவும் போராடி பல ஆயிரக்கணக்கான உயிர்களை மண்ணுக்காக தியாகம் கொடுத்த ஒரு இனத்துக்கு தலைமை தாங்குவோர் சில்லறைத்தனமான அரசியலை முன்னெடுப்போராக இருக்கமுடியாது.அவ்வாறானவர்கள் தமிழர்களை ஆளவேண்டுமென்பதற்காக தலைவன் என்ற நாமத்துக்காகவும் முயலமுடியாது.அது தமிழினத்துக்கு அகௌரவமாகவே அமையும். எனவே தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு இருப்போர் தமிழினத்தின் கடந்தகால வீர வரலாற்றையும் அவர்கள் கடந்துவந்த பாதையையும் கவனத்தில் கொண்டு ஈழத்தமிழரையும் மண்ணையும் மீட்கும் பக்குவத்தையும் இராஜதந்திரத்தையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து பொதுவெளியில் சிறுபிள்ளைத்தனமாக தமிழ் தரப்புகளே தங்களுக்குள் சண்டையிடுவதும் ஒருவரையொருவர் போட்டுக்கொடுப்பதும் ஒருவரையொருவர் இழிவுபடுத்துவதும் சமூகத்தின் விடுதலைக்கு பொருத்தமில்லாதது.இவ்வாறானவர்கள் நிச்சயமாக தமிழர்களின் பிரதிநிதிகளாக இருப்பதற்கு தகுதியானவர்களாக இருக்கமுடியாது என்பதை கூறிவைக்கின்றோம்.

## தேசியப் பார்வை...

தேசியன்

# மாணவர்களை தவறான பாதைக்கு இட்டுச்செல்லும் தொலைக்காட்சி நிறுவனம்

## பெற்றோரே அவதானம்!!!

தமிழர் தேசத்தில் சமகாலத்தில் இடம்பெறும் சில நிகழ்வுகள் இளம் சமுதாயத்தை படுபாதாளத்துக்குள் இட்டு சென்றுவிடும் நிகழ்வுகள் அதிகமாகவே இடம்பெறுவதை நாம் அவதானிக்கிறோம்.

இதில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று நடத்தும் மாணவர்கள்பங்குபெறும் விவாத போட்டிகளில், கல்விக்கு அப்பால் அதாவது மாணவர்கள் மத்தியில் சினிமா மோகத்தை வளர்க்கும் விதமாக விவாதிக்கப்பட்ட சில தலைப்புகள் பெற்றோர் மத்தியிலும் கல்வியாளர்கள் மத்தியிலும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

அந்த தொலைக்காட்சி நடத்திய விவாதப்போட்டியில் இன்றைய இளைஞர்கள் தலையில் வைத்து கொண்டாடுவது 'தல' 'தளபதி'வேட பொருத்தம், உடல்மொழி என்பவற்றை வெளிப்படுத்துவதில் சிறந்தவர் 'கமல் ஹாசன் ' 'சிவாஜிகணேசன்' சினிமா படவெற்றிக்கு காரணமாக அமைவது 'பாடல்கள்' 'கதைக்களம்' ஒரு திரைப்படத்தினுடைய நிலைத்திருப்பிற்குக் காரணம் திரைக்கதையா? பாடலா?மக்கள் மனங்களை ஆளும் இசையமைப்பாளர் ஏ ஆர் 'ரஹ்மான்' 'இளையராஜா' நடிகர் திலகத்தை இமயம் வரை கொண்டு செல்ல வைத்தது 'வேடப்பொருத்தம்' 'உடல்மொழி' தொலைக்காட்சி தொடர்கள் மக்களை 'சீர்படுத்துகின்றன' 'சீரழிக்கின்றன' மக்கள் மனதில் நீங்காத இடத்தை பெற்ற பெரும்பாடகி 'சுசீலா' 'ஜானகி'தமிழ் இசையமைப்பாளர்களில் சிறந்த பாடல்களை தந்தவர் 'மெல்லிசை மன்னர்' 'இசையானி' தத்துவார்த்தமான பின்னணி பாடகர் 'பாலசுப்ரமணியம்' 'ஜேசுதாஸ்' ஆகிய தலைப்புகளின் கீழ் விவாதங்களை அந்த தொலைக்காட்சி நிறுவனம் மாணவர்களை வைத்துக்கொண்டு நடத்தியிருந்தது.

தொலைக்காட்சி வழி மாணவர்கள் பங்குபெறும் விவாத போட்டிகள் மாணவர்கள் மத்தியில் Critical thinking skills, Communication skills, Knowledge,Civic engagement போன்ற அடிப்படை விடயங்களில் மாணவர்களை முன்னோக்கி வழிநடத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

சிங்கப்பூரின் 'The Arena' இங்கிலாந்தின் 'Debating Matters' அமெரிக்காவின் ''Public Forum Debate' 'Lincoln&Douglas Debate' ருவாண்டாவின் 'Debate League' போன்ற பல மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சிகளின் வடிவமைப்பில், தலைப்புகள் தெரிவில் மேற்படி அடிப்படை விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் தலயா அல்லது தளபதியா என்ற தலைப்பை வைத்து விவாதிக்க பாடசாலை அதிபர்கள் மாணவர்களை எப்படி பாடசாலை சீருடையுடன் அனுப்புகின்றார்கள் என தெரியவில்லை.

ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரி ஒன்றின் அதிபரின் சமூக பொறுப்பு தான் சார்ந்து நிற்கும் ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.வர்த்தக ரீதியில் தொழில் செய்யும் இவ்வாறான தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சமூக அக்கறை என்பது ஒரு பொருட்டாக இருக்கமாட்டாது.ஆனால் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அந்த சமூக பொறுப்பு இருக்கிறது. இனிவரும் காலங்களில் மாணவர்களை அவர்களுடைய எதிர்கால நலனுடன் சம்பந்தப்பட்ட கல்வி-தொழில் -அறிவியல்-தொழிநுட்ப ரீதியில் அவர்களுக்கான காலத்தை அமைத்துக்கொடுக்கும் களங்களை இனம் கண்டு அதன் பின்னால் மாணவர்களை வழிநடத்துவதே எதிர்கால சமூகத்துக்கு பொருத்தமாகும்.அதை விடுத்து இந்திய சினிமா மோகத்தை தமிழர் தாயகத்தில் பரப்பி அதன் வழியாக தங்களது வர்த்தக நலனை பெருக்கிக்கொள்ள முனையும் இவ்வாறான தரப்புகளிடமிருந்து கல்வியாளர்களும் பெற்றோரும் அவதானமாக இருக்க வேண்டுமென்பதை கூறிவைக்கின்றோம்.

> **"ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கல்லூரி ஒன்றின் அதிபரின் சமூக பொறுப்பு தான் சார்ந்து நிற்கும் ஆசிரியர் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.வர்த்தக ரீதியில் தொழில் செய்யும் இவ்வாறான தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சமூக அக்கறை என்பது ஒரு பொருட்டாக இருக்கமாட்டாது. ஆனால் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அந்த சமூக பொறுப்பு இருக்கிறது."**

# அழிவின் விளிம்பில் பாலஸ்தீன ஊடகங்கள்:

# களப்பணியில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள்!




**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

**பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும் அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. தற்போதயஇஸ்ரேல் பாலஸ்தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது**

1948 இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு போர் நிருபர்கள் தொழில்முறை ஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

### பாலஸ்தீன ஊடக சவால்கள்:

பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும் அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. பாலஸ்தீன பத்திரிகைகளில் 'அல் அய்யாம்' பாலஸ்தீனத்தின் இரண்டாவது பெரிய தினசரி செய்தித்தாளாகும்.

'அல் டிஃபா' 1934 மற்றும் 1948க்கு இடையில் வெளியான ஒரு செய்தித்தாளாகும். பெலஸ்டின் 1911 முதல் 1967 வரை யாஃபாவிலும் பின்னர் கிழக்கு ஜெருசலேமையும் தளமாகக் கொண்டு வெளியான ஒரு செய்தித்தாளாகும்.

காசாவில் இருந்து செயல்படும் முதன்மையான வாராந்திர செய்தித்தாள்களில் அல்-ஹயாத் அல்-ஜடிதா பாலஸ்தீனிய தேசிய அதிகாரசபையின் அதிகாரப்பூர்வ தினசரியாகும். போர்க் காலங்களில் இந்த ஊடகங்கள் மீதான தடைகளும் அத்துமீறல்களும் தொடர்ந்தன.

அல்-ஹூரியா னுகுடுக உடன் இணைந்த அரசியல் செய்தித்தாள் (பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி) வெளியாகிறது. அல் ஜாமியா அல் அரேபியா 1927 மற்றும் 1935 க்கு இடையில் வெளியான தினசரி செய்தித்தாள்.

லிசான் அல் அரப் ஜெருசலேமில் உள்ள ஒரு செய்தித்தாள் 1921 மற்றும் 1925 க்கு இடையில் வெளியிடப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் பாலஸ்தீனம்-இஸ்ரேல் ஜர்னல் ஒரு சுயாதீனமானொ இலாப நோக்கற்றொ காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. அத்துடன் பாலஸ்தீன டெலிகிராப் காசா பகுதியில் உள்ள முதல் இணைய செய்தித்தாள் ஆகும்.



பாலஸ்தீன டைம்ஸ் 2006 முதல் 2007 வரை ஒரே ஆங்கில மொழி தினசரி பாலஸ்தீனிய செய்தித்தாள் வெளிவருகிறது. திஸ் வீக் இன் பாலஸ்தீனமானது பாலஸ்தீனத்தின் கலாச்சாரொ சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஒரு மாத இதழாகும்.

அல்-குத்ஸ் ஜெருசலேமைத் தளமாகக் கொண்ட தினசரி செய்தித்தாள் அல்-குத்ஸ் ஒரு சுயாதீன பான்-அரபு தினசரி செய்தித்தாள் லண்டனில் வெளியிடப்பட்டது.

### பாலஸ்தீன தொலைக்காட்சி:

பாலஸ்தீனத்தில் உள்ள தொலைக்காட்சியானது வரலாற்று நிகழ்வுகள் பொருளாதார அபிவிருத்தி நோக்கிச் செல்லும் நிகழ்ச்சிகளை காண்பிக்கிறது. ஆனால் ஒரு முக்கிய கருப்பொருள் அரசியல். பாலஸ்தீனிய அதிகாரம் அதன் குடிமக்களுக்காக உருவாக்கப்பட்ட பொது நிகழ்ச்சிகள் மூலம் ஒரு பகுதியாக கலாச்சார விழுமியங்களை உருவாக்குகிறது. குழந்தைகள் நிகழ்ச்சிகள் முதல் நாடகங்கள் வரை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும்.




பாலஸ்தீனிய அதிகாரசபை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் மற்றும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பாலஸ்தீனிய அதிகாரத்தின் குடிமக்களால் பார்க்கப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்கள் மேல் எப்போதும் ஓர் இராணுவ அச்சுறுத்தல் இருந்த வண்ணமே உள்ளது.

பாலஸ்தீன தொலைக்காட்சி அல்-அக்ஸா டிவி அல்-குட்ஸ் டிவி பாலஸ்தீன ரேடியோ மற்றும் டிவி கார்ப்பரேஷன் பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழகம் பாலஸ்தீனிய செயற்கைக் கோள் சேனல் மற்றும் சனாபெல் டிவி ஆகியன முக்கியமான பாலஸ்தீன தொலைக்காட்சி நிறுவனங்களாகும்.

பாலஸ்தீனிய ஆட்சி அதிகாரத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட பாலஸ்தீன தொலைக்காட்சி 1 ஜூலை 1994 இல் நிறுவப்பட்டது. இஸ்ரேலிய இராணுவ அச்சுறுத்தலுக்கு எப்போதும் முகங்கொடுக்கும் பாலஸ்தீன தொலைக்காட்சி 19 ஜனவரி 2002 அன்று இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி அழித்தனர்.

பாலஸ்தீனிய துப்பாக்கிதாரியால் ஆறு பேரைக் கொன்றதற்கு பதிலடியாகக் கூறி மல்லாவில் உள்ள பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழக ஐந்து மாடி பிரதான கட்டிடம் மற்றும் ஒலிபரப்புக் கோபுரத்தை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அழித்தனர்.

### பத்திரிகையாளர்க்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்:

பாலஸ்தீனத்தில் அல் அய்யம்அல்-ஹயாத் அல்-ஜடிதாஅல் கர்மில்அல் மனார்அல் மசார் ஆகிய பத்திரிகைகள் போர்க்காலத்திலும் வெளிவருகிறது. காசாவில் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் இணையப் பிரச்னைகள் நிலவி வருகின்றது. தொடர்ந்து காசா நகரில் இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல் பத்திரிகையாளர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அல் குத்ஸ்பாலாஸ்தீன் அல்-முஸ்லிமாஅல்-இத்திஹாத்குல் அல் அரபு அல்-மதீனா ஆகிய ஊடகங்களின் பத்திரிகையாளர்க்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். பாலஸ்தீனத்தின் ஹமாஸ் - இஸ்ரேல் படையினருக்கும் இடையே கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி ஆரம்பித்த போர் தற்போது தீவிரமாக தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் படையினர் காசா பகுதியை கொடூரமாக தாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் காசாவில் போர் பற்றிய விவரங்களைச் சேகரிக்க பல்வேறு நாட்டில் இருந்து பத்திரிகையாளர்கள் சென்றிருந்தனர். தகவல் சேகரிக்கச் சென்றவர்களில் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர். அதில்30 பாலஸ்தீனர்கள் 4 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் லெபனானை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

பல பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேல் நேரடி அச்சுறுத்தலை கொடுத்துள்ளதால் போர்க்கள தகவல்களை சேகரிப்பதை பத்திரிக்கையாளர்கள் குறைத்துள்ளனர். அத்துடன் பாலஸ்தீன பத்திரிகையாளர்களை பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது.

இதற்கு முன்பாக 1992 - 2022 வரை இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்தில் வேறு 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என உழைக்கும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு ஆவணப்படுத்தியுள்ளது.

மே 2022 வரை மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் 2008 முதல் மோதலின் விளைவாக 6036 பாலஸ்தீனியர்கள் மற்றும் 272 இஸ்ரேலிய இறப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆவணப்படுத்தியுள்ளது.

### அமெரிக்க ஊடகர் ஷிரீன் அபு அக்லே கொலை :

ஷிரீன் அபு அக்லே ஏப்ரல் 3 1971இல் பிறந்த அமெரிக்க ஊடகர் 25 ஆண்டுகளாக அல் ஜஷீராவின் பத்திரிகையாளராகப் பணியாற்றி உள்ளார். இவரின் கொலை சர்வதேச ஊடகப்பரப்பில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாமில் நீல நிற மேல் அங்கி அணிந்தபடி ஊடகராக பணியாற்றிய வேளையில் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவரால் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனப் பகுதிகளில் பல தசாப்தங்களாக ஊடகப் பணி செய்ததற்காக மத்திய கிழக்கு முழுவதும் அபு அக்லே மிகவும் பிரபல்யமான ஒருவராக இருந்தார். மேலும் பல அரபு மற்றும் பாலஸ்தீனிய பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் காணப்பட்டார்.

11 மே 2022 அன்று அவர் இறந்தவுடன் இஸ்ரேல் கொலைக்கான பொறுப்பை ஏற்க மறுத்தது மற்றும் பாலஸ்தீனிய போராளிகளை குற்றம் சாட்டியது. இக்கொலை தனது படைகளால் 'தற்செயலாக' தாக்கப்பட்டிருக்கலாம் என்பதை முழுமையாக ஒப்புக் கொள்ளும் வரை படிப்படியாக அதன் கதையை மாற்றியது. ஆனாலும் குற்றவியல் விசாரணையை இஸ்ரேல் மேற்கொள்ள மறுத்தது.

### பாலஸ்தீன பெண் ஊடக முன்மாதிரி:

சர்வதேச ஊடகங்கள் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை ஆகியவற்றால் நடத்தப்பட்ட பல சுயாதீன விசாரணைகளுக்குப் பிறகு இக்கொலையை விசாரிக்க அனுமதி வந்தது.

இஸ்ரேலிய படைகளால் அபு அக்லே வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டு மருத்துவ உதவி மறுக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது. ஆயினும் நவம்பர் 2022 இல் அமெரிக்க நீதித் துறை இக்கொலை பற்றிய விசாரணையைத் தொடங்கியது. இந்த நடவடிக்கையை இஸ்ரேல் கண்டித்ததுடன் ஒத்துழைக்க மறுத்தது.




பத்திரிக்கையாளர் அபு அக்லே கொலைக்கான பொறுப்பேற்றுள்ள இஸ்ரேலிய சிப்பாய் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. அவர் இறந்த விதம் மற்றும் அவரது இறுதிச் சடங்கின் வன்முறை இடையூறு ஆகியவை இஸ்ரேலுக்கு பரவலான சர்வதேச கண்டனத்தை ஏற்படுத்தியது.

### இறுதிச் சடங்கில் பல்லாயிரம் மக்கள்:

அவரது இறுதிச் சடங்கில் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொடிகளை ஏந்தியபடியும் தேசியவாதப் பாடல்களைப் பாடியபடியும் கலந்து கொண்டனர்.

மிகுதி 14 ஆம் பக்கத்தில்...



# முத்த வெளியில் திரண்ட சனங்கள்



நிலாந்தன்

இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்.பொது வைத்தியசாலையில் தமிழ்மக்கள் கொல்லப்பட்ட நாள் அது என்பதனால்,சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியை வேறொரு நாளில் வைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்டிருந்தது. அக்கோரிக்கையை சந்தோஷ் நாராயணன் ஏற்கவில்லை.ஆனால் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் போரில் உயிர்நீத்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.நிகழ்ச்சியில் ஈழப்போரைப் பிரதிபலிக்கும் பாடல்கள் பாடப்பட்டன. அப்பொழுது அங்கு கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரித்து அதைக் கொண்டாடினார்கள்.அது ஒரு மழை நாள்.அன்று பின்னேரம் மழை விட்டுத் தந்தது.முத்த வெளியில் கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை காணாத சன வெள்ளம். அந்த இடத்தில் இதற்கு முன் வர்த்தகக் காட்சிகள் நடந்திருக்கின்றன.அவற்றுக்கும் மக்கள் திரண்டு வந்தார்கள்.ஆனால் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சிக்கு முன்னப்பொழுதும் இல்லாத அளவுக்கு சனம் திரண்டது.முனியப்பர் கோயிலுக்கு முன்னுள்ள வெளியிலும் சாலைகளின் இரு புறங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன.பால் வேறுபாடு இன்றி,வயது வேறுபாடு இன்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி அது.பாடகர்கள் பாடப்பாட அங்கு கூடியிருந்த இளையோர் உற்சாகமாக ஆடினார்கள்.அது தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையைக் காட்டியது.அவர்கள் கொண்டாட விரும்புகிறார்கள்.கொண்டாடுவதற்கு கிடைக்கும் எந்த ஒரு தருணத்தையும் அவர்கள் இழக்க விரும்பவில்லை. பெருவிழாக்கள்,பெருஞ் சந்தைகள் தொடக்கம் தனிப்பட்ட கொண்டாட்டங்கள் வரை மக்கள் ஆடிப்பாடி சந்தோசமாக இருக்க விரும்புகிறார்கள்.அவர்கள் சன்னியாசிகள் இல்லை. இச்சைகளைத் துறந்தவர்கள் இல்லை. எனவே கொண்டாடுவார்கள்.

அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை எப்பொழுது ஒழுங்குபடுத்த வேண்டும் எப்பொழுது ஒழுங்குபடுத்தக் கூடாது என்பதனை தீர்மானிக்க முற்படும் கட்சி அல்லது மக்கள் இயக்கம் ஒன்றில்,ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அல்லது அங்கு திரளும் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.ஏற்பாட்டாளர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் தமது மக்களை அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்குமாறு கேட்க வேண்டும்.ஆனால் அவ்வாறு தமிழ் மக்களை வழிநடத்தும் அளவுக்கு தமிழ் தேசியப்பரப்பில் ஒரு கட்சியோ மக்கள் இயக்கமோ இல்லை. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் பொதுக் கருத்தைத் திரட்டுமளவுக்கு சக்திமிக்க கட்சியும் கிடையாது;மக்கள் இயக்கமும் கிடையாது.

முதலாவதாக கட்சிகளிடம் 2009க்குப் பின்னரான இளைய தலைமுறையின் கூட்டு மனோநிலையை வசப்படுத்தவல்ல பொருத்தமான ஒரு கலைத்தரிசனம் இருக்க வேண்டும். சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியில் பங்குபற்றிய ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார்மக்களுடைய இக்கூட்டு மனோநிலையை கட்சிகள் விளங்கி வைத்திருக்கின்றனவா?மக்களை விடுதலைக்கான கலையை நோக்கி ஈர்க்கத்தக்க செயல் திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமாவது உண்டா? எந்த ஒரு கட்சியிடமாவது கலை பண்பாட்டு இயக்கங்கள் உண்டா? என்று.கலை இல்லாத ஒரு படை மந்தப்படை என்று சீனப் புரட்சியின் தலைவர் மாவோ சே துங் சொன்னார். பண்பாடுதான் தேசிய விடுதலையின் திறப்பு என்று ஆபிரிக்க அறிஞரும் சுதந்திரப் போராட்டத் தலைவருமான அமில்கார் கப்ரால் சொன்னார். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா விடுதலை இயக்கங்களிடமும் கலை கலாச்சார அமைப்புகள் இருந்தன.ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு இயங்கியது.அது விடுதலையை ஒரு மறுமலர்ச்சியாகப் பார்த்தது. பண்பாட்டு மறுமலர்ச்சி. அரசியல் மறுமலர்ச்சி.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலை ஒரு பிரிக்கப்படவியலாத பகுதியாக இருந்தது. பொங்குதமிழ் பேரெழுச்சிகளிலும் அப்படித்தான்.ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் அரசியல் அரங்கில் காணாமல் போனவற்றின் பட்டியலில் கலை பண்பாட்டு இயக்கங்களும் சேர்ந்து விட்டன. எழுக தமிழ்களுக்கு இசை இருக்கவில்லை; கலை இருக்கவில்லை.

பொங்குதமிழ் எழுச்சிகளை ஒழுங்கமைத்தவரும் அரங்கச் செயற்பாட்டாளரும் ஆகிய கலாநிதி சிதம்பரநாதன் கந்தர் மடத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்தி வருகிறார்.

ஆனால் கட்சிகள் மத்தியில் அவ்வாறான கலை விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.தமது மக்களை தமது அரசியல் இலக்குகளை நோக்கித் திரட்டுவதற்குத் தேவையான கலைத் தரிசனம் எந்த ஒரு கட்சியிடமும் கிடையாது. சில பாடல்கள் சில நாடகங்கள் தவிர,கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒரு பெரிய கலை வறட்சி நிலவுகிறது.கடந்த ஆண்டு நிகழ்ந்த கோட்டா கோகமவின் கலை வெளிப்பாட்டோடு ஒப்பிடுகையில் இது பாரதூரமான வறட்சி.

ஓர் ஆயுதப் போராட்டத்தின்போது சமூகம் பெருமளவுக்கு மூடப்பட்டிருக்கும்.அது காவலரண்களால் திட்டவட்டமாக மூடப்பட்டிருக்கும்.ஆனால் போரில்லாத நாட்களில் அவ்வாறல்ல.குறிப்பாக போரில் தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகத்தை எப்படித் திறப்பது? எங்கே திறப்பது? எதை நோக்கித் திறப்பது? என்பதனை போரில் வெற்றி பெற்ற தரப்பே தீர்மானிக்கின்றது.

கடந்த 15 ஆண்டுகளில் அவ்வாறு திறக்கப்பட்ட வழிகளின் ஊடாக நுண்கடன் நிதி நிறுவனங்கள் வந்தன.பிளாஸ்டிக் வியாபாரிகளும் அரும்பொருட்களைக் கவர்ந்து செல்வோரும் வந்தார்கள்.போதைப்பொருள் வியாபாரிகளும் முகவர்களும் வந்தார்கள்.கிரீஸ் மனிதன் வந்தான்.குள்ள மனிதன் வந்தான். வேறு யார் யாரோ எல்லாம் வந்தார்கள்.ராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்களை எப்படிப் பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தோற்கடிப்பது என்று சிந்தித்து திட்டமிட்டு வெளியில் இருந்து பல்வேறு வகைப்பட்ட சக்திகளும் தமிழ்ச் சமூகத்தில் உட் பாய்ச்சப்படுகின்றன. ஒரு காலம் இளையவர்கள் உன்னதமான இலட்சியங்களால் வழிநடத்தப்பட்டார்கள்.ஆனால் இப்பொழுது அப்படியல்ல. இளையவர்களை எப்படி அரசியல் நீக்கம் செய்யலாம்?அவர்களை எப்படிப் போதைக்குள் மூழ்கடிக்கலாம்? அவர்களுடைய கைகளில் எப்படி வாள்களைக் கொடுத்து மோத விடலாம்?அவர்களுடைய நம்பிக்கைகளை;விசுவாசத்தை;கவனக் குவிப்பை எப்படி இடம் மாற்றலாம்? அவர்கள் மத்தியில் இருந்தே எப்படி முகவர்களை உருவாக்கலாம்?என்றெல்லாம் சிந்தித்து செயல்படுவதற்கு அரச பலமும் அரச வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அது ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படுகின்றது;ஒருங்கிணைக்கப்படுகிறது. அது ஒரு பண்பாட்டுச் சிதைப்பு; ஒரு பண்பாட்டு நீக்கம். அதை எதிர்கொள்வதற்கு தமிழ்ச் சமூகம் தயாராக உள்ளதா? அதை குறித்து தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் கலைத் தரிசனங்கள் உண்டா?

இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு மண்ணை விட்டு எப்படி வெளியேறலாம் என்று இளையவர்கள் சிந்திக்கும் ஒரு காலகட்டம் இது. வெளிநாட்டுக்கு போவதற்காக தங்களை தயார்படுத்தும் இளையோர் மத்தியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக அண்மையில் ஒரு மனநல மருத்துவர் சுட்டிக்காட்டினார்.இது என்னுடைய நாடில்லை;இங்கே நான் இருக்கப் போவதில்லை,இருக்கின்ற கொஞ்ச காலத்துக்கு எப்படியும் இருந்து விட்டு போகலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.எப்படியும் இருந்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பண்பாட்டுச் சிதைவு.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது நாடாளுமன்றத்தில் கொல்வின்.ஆர்.டி.சில்வா பின்வருமாறு சொன்னார் தமிழர்களை நீங்கள் அவமதித்தால்;கேவலமாக நடத்தினால்;துஷ்பிரயோகம் செய்தால்;ஒடுக்கினால்; அவர்களுக்குக் கரைச்சல் கொடுத்தால்,அந்தப் போக்கின் விளைவாகசிலோனில் (இலங்கையில்)தனக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியை,ஒரு பண்பாட்டைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட அந்த இனத்துவ இருப்பிற்குள் இருந்து ஒரு புதிய தேசியவாதம் எழுவதற்கு நீங்கள் காரணமாக அமைவீர்கள். இப்பொழுது அவர்கள் கேட்பதை விடவும் அப்பொழுது அவர்கள் அதிகமாக கேட்பார்கள். அதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டி வரும்

அதாவது பலமான ஒரு பண்பாட்டை கொண்டிருக்கும் தமிழர்களை ஒடுக்கினால் வரக்கூடிய விளைவுகளை குறித்து அவர் எச்சரிக்கின்றார்.அதுதான் உண்மை.தமிழ் மக்கள் ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்டவர்கள்.கீழடி ஆய்வுகளின்படி தமிழ் வேர்கள் மேலும் ஆழத்துக்குச் செல்கின்றன.ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்ட மக்களை;மிகப் பலமான பண்பாட்டு நடுத்தர வர்க்கத்தை கொண்டிருக்கும் மக்களை; ராணுவ ரீதியாகத் தோற்கடிக்கடித்தாலும், அரசியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாகத் தோற்கடிப்பது கடினம் என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

ஆயுதப் போராட்ட காலகட்டமும் கடந்த 14 ஆண்டுகளும் ஒன்றல்ல. மாறிவரும் தொழில்நுட்பச் சூழலை;மாறிவரும் அரசியல் பண்பாட்டுச் சூழலை;தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.தமிழ் கூட்டுக் உளவியலின் மீது எப்படிச் செல்வாக்கு செலுத்துவது? அதை அரசியல் நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து அதை எப்படிக் காப்பாற்றுவது? அதைப் பண்பாட்டு நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து எப்படிக் காப்பாற்றுவது?அதை விடுதலைக்கான பண்பாட்டை நோக்கி எப்படி வழி நடத்துவது?

கொல்வின்.அர்.டி.சில்வா கூறியதுபோல தமிழ் மக்களின் தனித்துவமான பண்பாடுதான் தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் பிரதான மூலக்கூறுகளில் ஒன்று ஆகும். ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்கள் ஐந்து. நிலம் அதாவது தாயகம்;இனம்;பொதுமொழி;பொதுப் பண்பாடு;பொதுப் பொருளாதாரம் என்பனவே அந்த ஐந்து மூலக்கூறுகளும் ஆகும்.

எனவே 2009 க்குப் பின்னரான பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் எவரும் அதன் தக்கபூர்வ விளைவாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறார்கள்.அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஒரு தேசமாக திரட்டாமல் கட்சிகளாகப் பிரிக்கும் எவரும் பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த முடியாது.

> **2009 க்குப் பின்னரான பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் எவரும் அதன் தக்கபூர்வ விளைவாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறார்கள். அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஒரு தேசமாக திரட்டாமல் கட்சிகளாகப் பிரிக்கும் எவரும் பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த முடியாது.**



# ஈழத்தில் சுயாதீன ஊடகங்கள் மீதான அடக்கு முறையும்

# படுகொலையான நிமலராஜனின் தமிழ் ஊடக சேவையும்




**நவீனன்**

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

### றிச்சட் டி சொய்சா படுகொலை :

சிறிலங்காவிலும் ‘1990ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

### நிமலராஜன் படுகொலை:

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி கொல்லப்பட்டார்.


ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

### அச்சுறுத்தல் மிகுந்த பணி

நிமலராஜனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கிட்டதட்ட எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும் என்கிறது அவர்




இறப்பு குறித்து வெளியான பிபிசியின் இரங்கல் செய்தி.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது. அந்த சமயத்தில் மின்சார இணைப்பும் இல்லை. அவர் சைக்கிளில் சென்றுதான் செய்திகளை சேகரித்து வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

### இருளில் நடந்த கொலை

போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். அதில் தற்போது இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

### சமூக விடுதலைக்கான நடேசன் குரல் :

2004 மே 31ஆம் திகதி. நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு தனியார் பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகியிருந்தது. மிக காரசாரமானதும் துணிச்சலோடு பல விடயங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது. 2004 மே மாதம் 31ஆம் திகதி காலை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் தனது அலுவலகத்திற்கு செல்லும் வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார். பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன். நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படுவதையே விரும்புகின்றேன் என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.

### சிவராமின் ஆங்கிலப் புலமை :

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக்கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில விளக்கினார். சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றியமைத்தது.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில் முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை.

அது மட்டுமன்றி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் மாற்றின ஊடகவியலாளர்களுடனும் பல்வேறு தளங்களில் அவர் கரங் கோர்த்துக் கொண்டார்.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது ‘இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

### உதயன் மிதான தாக்குதல் :

2006இல் திருகோணமலையில் ஆறு மாணவர்களின் கொலையை வெளிப்படுத்தியதற்காக உதயன், சுடர் ஒளி நிருபர் சுப்பிரணியம் சுஜிதராஜ் கொல்லப்பட்டார்.

2006ம் ஆண்டு ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு பணியில் இருந்த இருவரை சுட்டக் கொன்றார்கள். இது ஊடக நிறுவனத்தக்குள் புகுந்து நடத்தப்பட்ட மிகப்பெரியதும் முக்கியமானதுமான தாக்குதலாகும்.

இதில் தாக்குதலை நடத்தியவர்கள் இலகுவாக கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருந்த போதும் அது தொடர்பாக எவரொருவரும் கைது செய்யபப்ட்வில்லை விசாரிக்கப்படவில்லை. இந்தக்காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதான பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

### வன்னியின் குரல் சத்தியமூர்த்தி :

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்று இறந்தார்.

ஊடகத்துறையில் 1990-களில் ஈடுபடத் தொடங்கிய இவர்,

‘வெளிச்சம்’ சஞ்சிகை உள்ளிட்ட அச்சு ஊடகங்களில் கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்தார். 1990-களின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் படைத்துறை ஊடகப்பணியில் ஈடுபட்டார். ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்த இவர், ஈழநாடு பத்திரிகையில் ஊடகவியலாளராக செயற்பட்டு அரசியல் படைத்துறை ஆய்வுகளையும் எழுதி வந்தார்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களுக்கு தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

### நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் ‘கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்’ என்ற அமைப்பு இலங்கையில் 1992ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

நிமலராஜனின் மரணத்திற்கு பிறகு வடகிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.



செல்வி வினாயகமூர்த்தி

# அதிகரித்து வரும் இளையோர் தற்கொலை ஏன் எதனால்?

**உலகலாவிய** ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் தற்கொலையும் தடுக்கமுடியாத பிரச்சனையாக மாறிவருவதுடன் இன்று உலகு எதிர்நோக்கும் இரண்டாம் தர பிரச்சனைகளுள் தற்கொலையும் ஒரு சமூக பிரச்சனையாக உருமாறி உருவாகியுள்ளதை எம்மால் அவதானிக்க முடியும் .

நாட்டிலிருந்து நாளாந்தம் வெளிவரும் செய்தி அறிக்கைகளில், விபத்து செய்திகளுடன் தற்கொலைச் செய்திகளும் முதன்மை பெறுவதுடன் தற்கொலைச்செய்திகளின் அறிக்கைகளின் பட்டியல், ஒவ்வொரு ஆண்டும் நீண்டு கொண்டே செல்கின்றது.

உலகில் ஏற்படும் மரணங்களுக்கு இரண்டாவது மிகப்பெரிய காரணமாக தற்கொலையே இருந்துவரும் நிலையில் உலகம் முழுவதும் 40 நொடிக்குள் ஒருவரை நாம் தற்கொலையின் காரணமாக இழந்துவருகிறோம்.

தமது அழகான வாழ்க்கையைத் தொடங்கும் முன்னர் பிஞ்சிலேயே உயிரை மாய்த்துக் கொள்ளும் இளம் பருவத்தினரின் தற்கொலை எண்ணிக்கையும் உயர்ந்து வரும் இன்றைய சூழலில், தற்கொலை தடுப்பு குறித்து ஆழமான விவாதத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியமும் இன்றைய சூழலில் ஏற்பட்டிருக்கிறது.

உலகில் விலைமதிப்பற்றதாகக் கருதப்படும் முக்கியமானவற்றுள் ஒன்று மனித உயிர்.அவ்வாறான விலைமதிப்பற்ற மனித உயிரை ஒரு நொடி சிந்திக்காது ஒரு முழக்கயிற்றில் மாய்த்துக்கொள்வதானது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்கள் வாழ்வின் ஆதாரமாக இருப்பது தங்களது பிள்ளைச் செல்வங்களே அவ்வாறு கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படும் பிள்ளைகள் திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு தற்கொலை செய்துகொள்வது மீளமுடியாத துயரத்தையும் இழப்பையும் தற்கொலை செய்து கொள்ளும் நபர்களின் குடும்பங்களுக்கு ஏற்படுத்துகிறது.

இன்றைய நவீன உலகில் நாகரீகம் என்ற போர்வையின் கீழ் வாழும் நாம், கைபேசிகளையும், கனிணிகளையும் மட்டுமே உற்ற நண்பர்களாகவும் துணையாகவும் பார்க்கிறோம். இந் நிலையில் இன்பம் துன்பம் சந்தேகம் தோல்வி வெற்றி என அனைத்து உணர்வுகளையும் அனைத்து நிகழ்வுகளையும் பகிரும் திண்ணையாக தொழில்நுட்பமே பழக்கப்பட்டு போனதால் மனிதத்துவத்தின் மகத்துவம் மனிதர்களிடையே அருகிப்போய் விட்டது.இதனால்

வாழ்க்கையில் வீசும் சிறு புயல் ஒரு சிறு சவால், சிறு ஏமாற்றம் போன்றவற்றை இன்றைய இளம் தலைமுறையினரால் ஏற்றுகொள்ள அல்லது எதிர்கொள்ள முடியாத நிலையில் தற்கொலைக்கு தூண்டப்படுகின்றனர். தற்கொலை என்பது ஒரு உணர்ச்சிவசப்பட்ட நிலையாக சொல்லப்பட்டு ஒரு தனிநபர் செயலாக பார்க்கப்பட்டாலும் அது ஒரு சமூக நிகழ்வாக,சமூகச் சிக்கலாக, சமூக பாதிப்பாகவே இன்றைய சூழலில் நோக்கப்படுகின்றது. ஒரு தனியனின் தற்கொலை நிகழ்வானது இந்த சமூகத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. உண்மையில் இச்செயலில் ஈடுபடுபவன் ஒரு கோழை ஒரு சுயநலமி என்றே நாம் கூறிக்கொண்டாலும் தான் அல்லது தனது குடும்பம் எதிர்கொண்ட ஒரு பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியாமல் மற்ற அனைவரது தலைகளிலும் அச்சுமையைப் போட்டுவிட்டு தப்பினேன் பிழைத்தேன் என்று தான் மட்டும் போய்ச் சேர்வது என்பது எந்தவிதத்திலும் நியாயமாக எதிர்பார்க்க முடியாது.இதேவேளை தற்காலைக்கு பின்னராக அக்குடும்பம் எதிர்நோக்கும் இழப்பின் வலி சமூகத்தின் மத்தியில் எதிர் நோக்கும் புறக்கணிப்பு அவமானம் வேதனைகள் போன்றவற்றை வார்த்தைகளால் வர்ணித்துவிட்டு நாம் கடந்து சென்றுவிடவும் முடியாது .ஒரு தாயின் கருவறையில் பலவித போராட்டத்தின் மத்தியில் வீரியமாக உயிர்கொண்டு உருவாக்கப்படும் மனித உயிர் இவ்வுலகில் பிறந்து கண்ணெதிரே நடக்

> **தமிழ்த் தேசியப் பரப்பில் தமிழர்களின் தமிழ்த் தேசிய போராட்டத்தில் தமிழ் இளையோர்கள் தமது இனத்தின் உரிமைக்காக தற்கொடைதாரிகளாக தங்களை மாற்றிக்கொண்டு தமது இனத்திற்காக உயிர்களை தியாகம் செய்து இந்த உலகுக்கு தமது உணர்வுகளை வெளிப்படுத்திய ஒரு சமூகத்தில் இன்று உயிர்கள் எந்தவித இலக்குகளுமின்றி தற்கொலைகளாக மாற்றம்பெறுவது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.**

கின்ற சிக்கல்களை எதிர்கொள்ளமுடியாது தற்கொலைக்கு செல்வதென்பது உண்மையில் உளவில் சிக்கலாக பார்க்கப்பட்டாலும் அவர்களால் எதிர்த்து போராட முடியாத கோழைத்தனம் என்றே கூறமுடியும். அதே வேளை குறைந்து வரும் தன்னம்பிக்கையால் சமீபகாலமாக மாணவர்கள் தற்கொலை செய்யும் நிகழ்வுகள் அதிகரித்து வருவதாக அதிர்ச்சி தகவல் ஒன்று தெரிவிக்கப்பட்டும் நிலையில் பெண்களைவிட ஆண்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கையே சமீபத்திய நாட்களில் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது .இவற்றுள் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை முடித்த இளையோர்களும க.பொ.த சாதாரணதரம் கற்றவர்களும் முதன்மை பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

உயிரினங்களில் மனிதனை தவிர வேறு எதுவும் தற்கொலை செய்து கொள்வதில்லை. ஆறறிவு படைத்த மனிதன் தற்கொலை செய்வதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பது மன உளைச்சல். தனிமை, புறக்கணிப்பு, பயம், கவலை, வறுமை, குடும்ப வன்முறை, விரக்தி காதல் தோல்வி போதைவஸ்து பாவனைகள் போன்ற காரணங்களால் ஏற்படும் நீண்ட நாட்களான மன உளைச்சலே தற்கொலை முடிவை எடுக்கத் தூண்டுவதாக ஆய்வுகள் தெரிவிக்கப்படுகின்றது

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின் படி ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 8 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். அதாவது ஒவ்வொரு 40 விநாடிக்கு ஒரு முறை, உலகில் எங்கோ ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். இவற்றுள்

சமீபகாலமாக 15வயது முதல் 29 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் அதிகளவில் தற்கொலை செய்துகொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எடுத்து நோக்குவோமானால் கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் சுமார் 9ஆயிரத்து 700 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 3ஆயிரத்து 406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இதில் 2ஆயிரத்து 832 பேர் ஆண்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக கடந்த ஆண்டில் 192 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மொத்த தற்கொலைச் சம்பவங்களில் ஐந்து வீதமான தற்கொலைகள், பொருளாதார நெருக்கடி காரணமாக இடம்பெற்றுள்ளதாக அவ் அறிக்கையில்



சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுபுள்ளிவிபரத்தின் அடிப்படையில் ஆண்டு தோறும் எமது நாட்டில் அதிகரித்து செல்லும் தற்கொலையின் பட்டியலை சாதரணமாக வாசித்து விட்டு நாம் கடந்து சென்று விட முடியாது.

தமிழ்தேசியப்பரப்பில் தமிழர்களின் தமிழ் தேசிய போராட்டத்தில் தமிழ் இளையோர்கள் தமது இனத்தின் உரிமைக்காக தற்கொடைதாரிகளாக தங்களை மாற்றிக்கொண்டு தமது இனத்திற்காக உயிர்களை தியாகம் செய்து இந்த உலகுக்கு தமது உணர்வுகளை வெளிப்படுத்திய ஒரு சமூகத்தில் இன்று உயிர்கள் எந்தவித இலக்குகளுமின்றி தற்கொலைகளாக மாற்றம்பெறுவது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

ஒரு வார்த்தை வெல்லும் ஒரு வார்த்தை கொல்லும் என்பார்கள். பிறர் சொல்லும் சொற்கள் கடும் சொற்களாக மாறி தற்கொலையை நோக்கிக்கூட தள்ளிவிடும் ஆற்றல் உடையவை என்கின்றனர் உளவியல் நிபுணர்கள். மனஅழுத்தம்தான் தற்கொலை எண்ணத்தின் ஆரம்ப அறிகுறி என்றால் ஆம் என்கின்றனர் நிபுணர்கள். சில அறிகுறிகளின் மூலம் நாம் விழிப்புணர்வுடன் தற்கொலை என்ற எண்ணம் உடையவர்களை கண்டறியமுடியும். குடும்பத்தில் எவர் ஒருவர் தற்கொலை முயற்சியை செய்திருந்தாலும், அவரது பரம்பரையில் வரும் நபர்களுக்கு தற்கொலை எண்ணம் வர அதிக வாய்ப்புண்டு. ஏற்கெனவே தற்கொலை செய்ய முற்பட்டவர்களுக்கு மீண்டும் செய்ய அதிக வாய்ப்புண்டு. மரபியல் பிரச்சினைகளும் காரணமாக இருக்கலாம்.

நல்லாத்தானே இருந்தான் ஏன் தற்கொலை செய்தான். இந்த ஒரு வார்த்தையுடன் ஒரு தற்கொலையை செய்தியாக கடந்துவிட முடியாது. தற்கொலை செய்வது, கோழைத்தனம், அனைத்துக்கும் தீர்வு இருக்கு என்று சொல்வது சரிதான்.

ஆனால் எவர்? அவன் உயிருடன் இருக்கையில், அவனுடைய பிரச்சினையை தீர்த்து வைப்பதிலும், அவனுக்கு தேவையானதை நிறைவேற்றுவதிலும் பங்காற்றினீர்கள், என்றால் விடை பூச்சியம்.

மாறாக அவனுக்கான பிரச்சினைகளை கூட்டுவதிலும் தற்கொலை செய் என்று தூண்டுவதனையும் இந்த சமுதாயம் செய்கின்றது.

மேலும், தற்கொலை தொடர்பான எண்ணம் ஒருவருக்கு சடுதியாக ஏற்படுவதில்லை அவை பல நாட்கள் அவர்களின் எண்ணத்தில் உருவாகி அதன் பின் அவை செயல் வடிவம் பெறுகிறது என்பதுதான் உண்மை. இந்த கால கட்டத்தில் நாம் நினைத்தால் நம் கண்முன் இன்னும் ஒரு உயிர் பறிபோவதை எம்மால் தடுக்க இயலும் அதற்காக நாம் கட்டாயம் உளவியலாளர்கள் ஆக அல்லது கல்வியறிவு உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என நினைப்பது ஒரு தவறான புரிதல்

இதற்கு முதல்படி, தற்கொலைப் பற்றிய விழிப்புணர்வை, எமது சமூக வட்டத்தில் ஏற்படுத்தி. தற்கொலை, மனச்சோர்வு, மனநல மருத்துவ சிகிச்சை முறைகளால் குணப்படுத்தக்கூடிய ஒன்று என்பதை மற்றவர்கள் உணர செய்ய வேண்டும்.

என்ன செய்வது என்று தெரியமால் தவறான முடிவை எடுக்கும் பலருக்கு எமது ஆறுதலான வார்த்தையும், அவர்களுடன் செலவு செய்யும் நிமிடங்களும் அவர்களின் வாழ் நாட்களையும் நம்பிக்கையையும் அதிகமாக்கும் என்பது உண்மை அதன் பின் தற்கொலை எண்ணம் மாறி, உற்சாகத்துடன் மீண்டு வரும் ஒருவரின் புன்னகை நமக்கு ஏற்படுத்தும் மனநிறைவை எமது வார்த்தைகளால் விவரிக்க இயலாது. தற்கொலையை தடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு உண்டு. என்பதை மறக்க வேண்டாம்.

இளைஞர்களைதற்கொலைப் பிடியிலிருந்து காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு நம் அனைவருக்குமே இருக்கிறது. இக்காலத் தலைமுறையினர் தேவைக்கு அதிகமாகவே இளம்வயதில் பல விஷயங்களைப் பெறுவதால் சில அடிப்படை விஷயங்களைக் கற்க முடியாமல் போகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான தரமான நேரத்தை ஒதுக்க வேண்டியது அவசியமாகிறது.

சிறுவயதிலேயே குடும்பத்திற்கான வரைமுறைகளையும் விழுமியங்களையும் சொல்லி அவர்களைப் பழக்கப்படுத்தவேண்டும். ஆரம்பத்தில் பொத்திப்பொத்தி வைத்துவிட்டு, பொறுப்புகளைக் கொடுக்கும்போது அவர்கள் செய்வதறியாமல் திகைக்கின்றனர்.

சிறுவயதிலிருந்தே பொறுப்புகளை அவர்களிடம் கொடுத்து, சிறு சிறு தவறுகளை பொருட்படுத்தாமல் அவர்களுக்கான கற்றல் இடைவெளியை வழங்கும்போது, பெரும் பிரச்சனைகளில் இருந்து அவர்களை நம்மால் காப்பாற்ற முடியும்.

அத்தோடு தற்கொலை வீதத்தை குறைப்பதற்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகபடியான அக்கறையும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சார்பில் அதிக கவனமும் சமூக மற்றும் சமூதாய மட்டில் தொடர்ச்சாயான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**ஜனநாயகம் சமூக சமத்துவம் வாழ்வாதார உயர்வு உரிமைகள் இருக்கின்றதா என்ற கேள்விக்கு நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் விடை வகுத்துக்கொள்ள வேண்டும். இவ் இன்னல்கள் ஒழித்து வாழ்வாதாரம் மேலோங்க தேயிலை தோட்டங்கள் தனி உரிமை அல்லது அரசுடமையாக்க வேண்டும். காணிகளுக்கு உரிமை வழங்க வேண்டும. படித்த சமூகம் அழுக்க குழுக்களாக செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலமே இம் மக்களின் வாழ்வாதாரத்தை ஒளிரச்செய்ய முடியும்.**

# தேயிலைத் தோட்டமும் பெண் தொழிலாளர்களின் நிலையும்

விவசாய நாடான இலங்கை பெருந்தோட்ட பயிர்களான தேயிலை தென்னை இறப்பர் மூலமே அதிக வருமானத்தை பெற்று வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருமானமானது அவ்வளவு இலகுவாக கிடைக்கப் பெறுவதன்று. அதிலும் தேயிலையினால் இலாபம் பெறுவது மிகவும் கடினமாகும். ஆயினும் இலங்கையில் தேயிலையினூடாகவே மலையக பெருந்தோட்ட மக்கள் குறைந்த சம்பளத்தில் வாழ்வாதாரம் ஈட்டி வருகின்றனர்.

இலங்கை தேயிலை ஏற்றமதியாளர்கள் சங்கம் குறிப்பிடுவதன் படி 1 கிலோ தேயிலையின் விற்பனை பெறுமதி 2023 மே மாதத்திற்கு 1055.45 அதாவது 3.43 டொலர் ஆகும். ஜனவரி தொடக்கம் ஜுலை மாதத்துக்கு இடையில் 155.82 மில்லியன் முபள தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் நாளாந்த வாழ்வாதாரத்தினை பெற பல்வேறு இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் 50% ற்கு அதிகமாக பெண்களே பணிபுரிகின்றனர். அதன்படி இவர்கள் எவ்வாறான இன்னல்களோடு வாழ்வாதாரம் ஈட்டி வருகின்றனர் என பார்ப்போம்.

## தேயிலை தோட்ட அட்டைக்கடியும் விலங்கு தாக்குதலும்

இவர்கள் தேயிலை தோட்டங்களில் தினசரி எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று அட்டை கடியாகும். இது தொடர்பாக 39 வயதுடைய பெண் தோட்ட தொழிலாளி தெரிவிக்கயில் எந்தநாளும் குறைஞ்சது 30 அட்டைக்கு மேல கடிக்கும். அதுக்காக மருந்து பாவிச்சாலும் மழையில கரைஞ்சிறும். அப்போ நூத்து கணக்கான அட்டைங்ககிட்ட இருந்து தப்புரதே பெரிய விசியம். சில மனுசங்கதா எங்க ரத்தத குடிக்கிறாங்கனா இந்த அட்டைகளும் எங்க உதிரத்த குடிக்கிறது எங்க சாபம் என தெரிவித்தார்.

மேலும் சில தொழிலாளர்கள் தெரிவிக்கையில் அட்ட கடிக்கு மருந்தா சவர்க்காரம் உப்பு பாவிப்போம். அப்படி பாவிக்கிறதால சிலருக்கு ஒத்துக்காது. இதுக்கு கடையில 100 ரூபாக்கு மருந்து வாங்குனா அது ஒரு கிழமைக்குதான். அப்படி மாசத்துக்கு ஒருநாள் சம்பளத்துல பாதி போயிரும்' என்றனர். எனினும் தமது வாழ்வாதாரத்திற்காக இவற்றை எல்லாம் துச்சமாக வேலை செய்கின்றனர்.

அடுத்ததாக தேயிலைத் தோட்டங்கள் காடுகளாக இருப்பதால் இவர்கள் விலங்குகளுடனும் போராட வேண்டியுள்ளது. இதனை 43 வயதுடைய மற்றொரு பெண் தெரிவிக்கையில் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) தேயிலை தோட்டதுல சிலவேளை குளவி கலைஞ்சி துரத்தி வரும் . சில நேரம் தேயிலைல இருக்கது தெரியாம கொழுந்து எடுக்கும் போது குளவிக தாக்கும் . அதனால எத்தனையோ பேர வைத்தியசாலைல சேத்துருக்கோம் என்றார்.

மேலும் தொழிலாளர்கள் குறிப்பிடுகையில் சில சமயங்களில் பன்றி சிறுத்தை தங்களை துரத்தி வரும்போது பாதுகாத்துக்கொள்ள கல்லும் முள்ளுமான காட்டு வழியில் அதற்கு சமனாக ஓட வேண்டும். அதோடு பாம்புகள் கீழே இருப்பதை அறியாது மிதித்து விட தங்களை தாக்கும் வாய்ப்புள்ளது. அயல் தோட்டத்தில் இதற்கு இலக்காகிய 45 வயதுடைய பெண் பல மாதங்கள் சிகிச்சை பெற்றதாக தெரிவித்திருந்தார்கள். இதிலிருந்து தங்களை பாதுகாத்து வாழ்வாதாரம் ஈட்ட தோட்ட நிர்வாகம் என்ன விதமான பாதுகாப்பு செய்திருந்தாலும் அவை எல்லாம் இவ் விலங்குகளுக்கு சொற்பமே என்றனர். இதன்படி மாதத்திற்கு ஒரு பெண் தொழிலாளராவது பாதிக்கப்படாமல் இருப்பது அரிது. இருந்தும் இவற்றையெல்லாம் வாழ்வாதாரத்திற்காக கடந்தாக வேண்டும்



இது தொடர்பாக தோட்ட மேற்பார்வையாளர் குறிப்பிடுகையில் 'தொழிலாளுக்கான அட்டை மருந்து கொடுப்பதோடு விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள விழிப்புணர்வுகளும் கொடுக்கின்றோம்.மக்களே தோட்ட நிர்வாகத்திடம் மக்களே தங்களின் கோரிக்கைகளை கூற வேண்டும்' என்றார். ஆனால் இதுகுறித்து மக்களின் நிலைபாடு வேறுபாடாகின்றது.

## தேயிலை தோட்டமும் சூழலியல் பாதிப்பும்

வாழ்வாதாரத்திற்காக மேற்குறிப்பிட்ட இன்னல்களை சகித்துக்கொள்வதுடன் எழில் கொள்ளும் சூழலினால் ஏற்படும் பாதிப்புகளையும் எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக 41 வயதான வ.நிர்மலா என்ற பெண்ணொருவர் கூறுகயில் சில நேரம் முள்ளு மாரி கூரானது கால்ல குத்திரும் அத தாங்கிட்டுதா அன்னைக்கு முழு நாளும் சமாளிக்கனு. வேலை செய்யு போது மரம் முறிஞ்சி விழும் அந்த நேரத்துலயும் எங்க உயிர காப்பாத்திக்க ஓடனும். ஒரு கனம் அசந்தாலும் உயிர் போயிரும்'. என்கின்றார்.



தொழிலாளர்கள் இதனை தெரிவிக்கையில் அந்த அடை மழையிலும் 8-5 மணி வரை 20முப தேயிலை எடுத்தால் மட்டுமே ஒரு நாள் சம்பளம் கிடைக்கும். கடுமையான இடி மின்னல் மழையென பார்க்காமல் வேலை செய்வது கட்டாயமாகும் கடுமையான காற்று வீசும் நேரங்களில் 20 கிலோ கொழுந்துடைய கூடையுடன் வழுக்கி விழுந்து அடிபட்ட சந்தர்ப்பங்களை கூறியிருந்தார்கள். இதனாலே மழைக்காலங்களில் செருப்பு அணிவதில்லை. ஆனால் தோட்ட மேற்பார்வையாளர் கருத்துப்படி 'தக்க நேரத்தில் அவர்களுகான விடுமுறைகள் தருவதோடு தோட்ட கம்பனிகளின் முடிவுகளே மக்களின் தேயிலை அளவை தீர்மானிக்குமென்றார்'. இருப்பினும் இவ்வற்றை எல்லாம் தாண்டியே குறைந்த வறுமானத்தில் வாழ்வாதாரம் பெறுவதாக தொழிலாளர்கள் அறியத்தந்தனர்.

## தேயிலை தோட்டமும் அத்தியாவசிய வசதியும்

இயற்கையும் இவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கு தடையாக இருப்பது போல் செயற்கையான தொழிலாளர் உரிமையும் மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. தொழிலாளர்கள் உரிமையின்படி வேலை நேர வசதிகள் இருக்க வேண்டும். ஆனால் இவர்களுக்கு அத்தியாவசிய வசதிகள் கூட இல்லாத நிலையிலேயே பணிபுரிகின்றனர். இதற்கு 37 வயதுடைய பெண்னோருவரை வினாவிய போது (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) எங்களுக்கு மழைக்கு ஒதுங்க கூட எந்த இடமும் இல்ல. மழையோ வெயிலோ அந்த மலையிலேயே வேலை செய்யனும். நாங்க சாப்பிடுறதுக்கு வீட்டுக்கு போக முடியாது. இங்கயும் சாப்புட இடமும் இல்ல. இதனால வீதியிலேயே உக்காந்து தினமும் சாப்டனும். அதுவும் மழை நாள்னா நாங்க நனைஞ்சிட்டு அட்டைய பிடுங்கி வீசிட்டு மறுகையில சாப்டனும். அப்போ சாப்பிடவே விருப்பம் இருக்காது என்றார்.

இதுகுறித்து பெண் தொழிலாளர்கள் நாங்கள் பெண் என்றதால் மாதவிடாய் மற்றும் சுகாதாரொ அவசர தேவைகளுக்கு கூட மலசலகூடங்கள் இல்லாத நிலையை சந்திக்கிறோம். மயக்கம் வருமாயின் ஓய்வு அறை இன்றி வீதிகளிலும் காடுகளிலுமே ஓய்வு பெறும் நிலை உள்ளது என கூறினார்கள். இன்றைய 21ம் நூற்றாண்டிலேயும் குறைந்த வாழ்வாதாரத்திற்காக அதிக இன்னல்படும் சமூகமாக இன்றுவரை இருந்து வருகின்றது என்பதற்கு இதுவே சாட்சியாகும். ஆனால் தோட்ட நிர்வாகம் மக்கள் கோரிக்கை தரும் பட்சத்தில் நிறைவேற்றுவோம் என்று மட்டுமே கூறினார்கள்.

ஆனால் இன்றைய அசாதாரண சூழ்நிலையில் வாழ்வாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ளது. இலங்கை தேயிலை மொத்த உற்பத்தியில் நலிவடைந்துவிட்டது. இதன் பிரதான காரணம் பசளை தட்டுபாடாகும். இதன்போது விளைச்சல் அற்ற நிலையில் 20 கிலோ உற்பத்தி செய்வது கடினமானது. இதே வேளை உக்ரைன் - ரஷ்ய போரினால் தேயிலை ஏற்றுமதியும் வீழ்ச்சியடைய பெருந்தோட்ட குடிகளின் வாழ்வாரத்தில் திண்டாட்டம் ஏற்பட்டது. காலப்போக்கில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையும் பண வீக்கமும் இம் மக்களின் வறுமானத்தை சீர்குலைத்தது.

தொழிலாளர்களின் சவால்கள் குறித்து பொதுநல அதிகாரி கூறுகையில் மக்களுக்கான பாதுகாப்பு ரெயின் போரஸ்ட் திட்டத்தின் படி சீராக செய்து வருகிறது. குளவிகள் விலங்கு தாக்குதல் தொடர்பாக விழிப்புணர்வுகளையும் செய்து வருவதோடு அத்தியவசிய வசதிகளையும் சீராக பராமரிக்குமிடத்து அதனையும் செய்து தருவதாக கூறினார். இவ்வாறு நிர்வாகம் கூறினாலும் மக்களின் நிலைப்பாடு வேறானவையேயாகும்.

இவ் உரிமை கோரும் மக்களின் குரலாக ஆசிரியரும் சமூக ஆர்வளருமான எப்.ஸ்டன்லி குமார் குறிப்பிடுகையில் தொழிலாளர்கள் உரிமை என்பது இலங்கையின் மலையகத்தில் மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. சோசலிசம் என்பதை தாண்டி ஆரம்ப ராஜகாரிய முறைமை முதல் இன்றுவரை அடிமைகளாகவே உள்ளனர். 1991 தனியார் கூட்டு ஒப்பந்தம் தொடக்கம் இன்று வரை அரசாங்கம் வெறும் பார்வையாளராகவே இருக்கின்றது. இதுவே இவர்களின் போராட்ட நிலைக்கு காரணமாகும். தமது குறைந்த வாழ்வாதாரத்தை பெற நிர்வாகத்தோடு பேராடும் இடைவிடாது உழைக்கும் சமூகமாக இன்றுவரை உள்ளது. தேயிலையை நம்பாத தொழிலதிபர்கள் இதனால் வாழ்வாதாரம் ஈட்ட இதனையே நம்பியுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

இவர்களுக்கான ஜனநாயகம் சமூக சமத்துவம் வாழ்வாதார உயர்வு உரிமைகள் இருக்கின்றதா என்ற கேள்விக்கு நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் விடை வகுத்துக்கொள்ள வேண்டும். இவ் இன்னல்கள் ஒழித்து வாழ்வாதாரம் மேலோங்க தேயிலை தோட்டங்கள் தனி உரிமை அல்லது அரசுடமையாக்க வேண்டும். காணிகளுக்கு உரிமை வழங்க வேண்டும. படித்த சமூகம் அழுக்க குழூக்களாக செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலமே இம் மக்களின் வாழ்வாதாரத்தை ஒளிரச்செய்ய முடியும்.




# ஆக்கிரமிப்பதில் சிங்களத்திற்கு உள்ள வேகம் தடுப்பதற்கு தமிழ் மக்களிடம் இல்லை

கிழக்கு மாகாணத்தின் தற்போதை நிலைமையினை பார்க்கும்போது இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் பனிப்போரை நிலைமையினை வெளிப்படுத்தி உள்ளது போன்ற நிலைமையினை காணமுடிகின்றது.

இன்றைய நிலையில் கிழக்கில் நடைபெறும் செயற்பாடுகளை கடந்துசெல்லமுடியாத நிலைமையே காணப்படுகின்றது.குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய நிலைமையினை தொடர்ந்து வெளிக்கொணர வேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பதை யாரும் இலகுவில் கடந்துசெல்லமுடியாது என்பதை அண்மைக்காலக செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

காணி பிரச்சினையென்பது வெறுமனே ஒரு பகுதியினரின் காணப்பிரச்சினையென்ற தொனியில் கடந்துசெல்லமுடியாது என்பதை அனைவருக்கும் இன்று உணரும் நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பது டட்லி சேனநாயக்க காலம் தொடக்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. 1956ஆம் ஆண்டு இதன்காரணமாக இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான பாரிய வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டமையே சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாக கருதப்படுகின்றது. 1960ஆம் ஆண்டு வரை வடகிழக்கில் எந்த தொகுதியிலும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான சரித்திரம் இல்லை. 1960ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத்தேர்தலில்தான் முதன்முதலாக அம்பாறை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிகை சின்னத்தில் போட்டியிட்ட விஜேயசிங்க விஜயபாகு என்ற சிங்களவர் பாராளுமன்ற உறுப்பினரானார். 1961ஆம் ஆண்டு ஏப்ரல்,10 இல் மட்டக்களப்பு மாவட்டத்துடன் ஒன்றாக இருந்த அம்பாறை பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் என வர்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1977ஆம் ஆண்டு யூன்,24 ஆம் திகதி முதன் முதலாக தமிழர் தலைநகரமான திருகோணமலை மாவட்டத்தில் சேருவெல என்ற தொகுதி உருவாக்கப்பட்டு எச்.டி. லீலரெட்ண என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானார்.

1989,பெப்ரவரி,20 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்பேசும் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டது.ஆனால் 1994,ஆகஷ்ட்,20, இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மொத்தம் 06, ஆசனங்களில் 04, சிங்களப்பாராளுமன்ற உறுப்பினர்களும், 02, முஷ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவானார்கள்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அம்பாறை மாவட்ட நிலைமை சிங்கள, முஷ்லிம் அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தினை பொறுத்த வரையில் 1960ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் 29தமிழ் கிராமங்கள் காணாமல்போயுள்ளன. அம்பாறையில் தமிழர்களின் வரலாற்று சுவடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வடகிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டம் சொல்ல வேண்டியதில்லை 1977இல் சேருவெல சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டு இன்று வரை அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களால் தமிழர்கள் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.அங் இன்றுமும் தமி



ழர்கள் வாழும் பகுதிகளுக்குள் விகாரை அமைப்பகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான நிலத்தில், 23 விகாரைகளின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 31 விகாரைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று வனப்பாதுகாப்பு திணைக்களம் 43435 ஏக்கர் காணியினையும், தொல்பொருள் திணைக்களம் 2605 ஏக்கர் காணியினையும், புல்மோட்டை அரசிமலை பௌத்தப்பிக்கு கிழக்கு செயலணி 2908 ஏக்கர் காணியினையும் ஆக்கிரமித்துள்ளனர்.

மேலும் அண்ணளவாக முப்பதாயிரம் ஏக்கர் காணியை வனவிலங்கு திணைக்களம் தங்களுக்குரியது என தெரிவித்து வருவதால் 28 ஆயிரம் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி பண்ணையாளர்கள் அவதியுற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் ஏறக்குறைய 74, வீதமும், இஷ்லாமியர் 25, வீதமும், சிங்களவர் 1, வீதமாகவும் உள்ள நிலையில் (2023, புள்ளிவிபரம் எடுத்தால் தமிழர் வீதம் இன்னும் குறையலாம்)சிங்களவர்களின் வீதத்தினை அதிகரித்து எதிர்காலத்தில் அரசியல் ரீதியான இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. ஆகிய மேச்சல் தரைகளை இலக்கு வைத்து அம்பாறை, பொலன்றுவை, மொன்றாகலை மாவட்ட சிங்கள மக்களை வரவழைத்து அத்துமீறிய சிங்கள குடிப்பரம்பலை மேற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தையும் எதிர்காலத்தில் 2030ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறான நிலையிலேயே மட்டக்களப்பு சித்தாண்டியில் 50நாட்களையும் தாண்டிய வகையில் கால்நடை பண்ணையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றனர்.இந்த போராட்டம் பண்ணையாளர்களின் போராட்டமாக மட்டுமல்லாமல் கிழக்கின் முழு இருப்புக்கான போராட்டமாக மாற்றமடையும் நிலையுருவாகிவருகின்றது.

அண்மையில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டமும் வடக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குழுவினரின் வருகையும் இந்த போராட்டத்தினை அடுத்தகட்ட நிலைக்கு கொண்டுசெல்லும் நிலை காணப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவிலான உரிமைசார்ந்த போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. குறிப்பாக நில ஆக்கிரமிப்புக்கான போராட்டம் என்பது கிழக்கு பல்கலைகழக மாணவர்கள் மத்தியில் இருந்துவெளிப்படுவது குறைந்தளவிலேயே காணப்பட்டுவந்த நிலையில் அண்மையில் வீரியம்கொண்ட போராட்டம் ஒன்று நடைபெற்றமையானது ஒட்டுமொத்த வடகிழக்கினையும் ஆட்டம்காணவைத்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான போராட்டமானது பல்கலைக்கழகத்திலிருந்து சுமார் 05 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் பேரணியாக சென்றதானது பாரிய எழுச்சியை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் அத்துமீறிய குடியேற்றவாசிகளுக்கும் எதிராக எழுப்பிய கோசங்கள் என்பதை வெறுமனே யாரும் சாதாரணமாக கடந்துசெல்லமுடியாது. இன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஏழுச்சியானது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்திலும் ஏற்படவேண்டும். ஒட்டு மொத்த கிழக்கிலும் இந்த ஏழுச்சி ஏற்படவேண்டுமானால் வடகிழக்கு மாகாணம் எங்கும் எழுச்சி ஏற்படவேண்டும்.

மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தினை பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சியை முன்னெடுத்துவருகின்றது.அந்த முன்னெடுப்புகளில் ஒன்றுதான் மயிலத்தமடு,மாதவனை பகுதிய செயற்பாடாகும்.இது இன்றுநேற்று அல்ல டட்லி சேனநாயக்க காலத்தில் நினைத்த விடயத்தினை ஜேஆர் காலத்தில் நடைமுறைப்படுத்த முயற்சித்தார்கள்.தற்போது ஜனநாயகம் பேசிக்கொண்டு நிலங்களை பறித்துக்கொண்டு சிங்கள மயப்படுத்தி கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை இல்லாமல்செய்வதில் இந்த அரசாங்கம் பாரிய முனைப்பினை காட்டிவருகின்றது.

அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்துவரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதேநிலைமையினை எதிர்கொண்டுள்ள காலச்சூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம்,வஞ்சிக்கப்படுகின்றோம். அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றார்கள்.அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங்களது கடமையாகும்.இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்ட விரோத குடியேற்றகாரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர்சிலையினை வைத்தார்கள்,சட்ட விரோதமாக அம்பிட்டிய தலைமையிலான அராஜககுழு தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது.முன்னாள் ஆளுனர் அனுராதா ஜகம்பத் தலைமையில் நிலப்பறிப்பு செயற்பாடுகள் இந்த விடயம் தொடர்பில் சட்ட ரீதியான நடைமுறைகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் நாங்கள் வடகிழக்கில் மாபெரும் மக்கள் அலையினை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலை சொல்லவேண்டிய நாள் வெகுதொலைவில் இல்லைஎன்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த கருத்து வெறும் அரசியல் ரீதியான கருத்தாக இல்லாமல் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் வடகிழக்கு ரீதியாக எழுச்சிபெறும்போது கிழக்கில் தமிழர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படும். இன்று மயிலத்தமடு,மாதவனையில் அத்துமீறிய காணி அபகரிப்புகளில் ஈடுபடுவோருக்கு தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் பாரியளவில் உதவிகளை வழங்கிவரும் நிலையில் இவற்றினை தடுத்து நிறுத்தி தமிழர்களின் தாயப்பகுதியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. ○

**“கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் வடகிழக்கு ரீதியாக எழுச்சிபெறும்போது கிழக்கில் தமிழர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படும். இன்று மயிலத்தமடு,மாதவனையில் அத்துமீறிய காணி அபகரிப்புகளில் ஈடுபடுவோருக்கு தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் பாரியளவில் உதவிகளை வழங்கிவரும் நிலையில் இவற்றினை தடுத்து நிறுத்தி தமிழர்களின் தாயப்பகுதியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.”**

# கிழக்கிலங்கை திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் மாபெரும் திருப்புகழ் மாநாடு

**செல்வி விநாயகமூர்த்தி**

கிழக்கிலங்கையில் பண்டைய மட்டக்களப்பு நாகரீகத்தின் தேசத்துக்கோயிலாக திகழும் வரலாற்று சிறப்புமிக்க திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் கந்தசஷ்டி விரத நாட்களில் தமிழின் கடவுளாம் முருகப்பெருமானின் புகழ்பாடும் வண்ணம் உலகலாவிய ரீதியில் உள்ள முருக பக்தர்களை இணைக்கும் வகையில் மாபெரும் திருப்புகழ் மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் சங்கம் மற்றும் திருக்கோவில் சேவற்கொடியோன் அமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சமூக முயற்சியாளர்களின் வலயமைப்பு (SPAND)ஆகியவற்றின் அனுசரனையில் கந்தப்பெருமானின் புகழ் பாடும் வண்ணம் மாபெரும் திருப்புகழ் மாநாடு வரலாற்றில் முதன்முறையாக தேசத்து புகழ் திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தில் எதிர்வரும் கந்தசஷ்டி விரத காலங்களில் முருகப்பெருமானின் புகழ் பாட திருப்புகழ் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது.

திருப்புகழ் என்பது தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்களாக கொள்ளப்படுவதோடு முருகக் கடவுள் மீது அருணகிரிநாதரால் இயற்றிய ஒரு பக்தி நூலாகும்.

அருணகிரிநாதர் கி.பி 15 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் திருவண்ணாமலையில் பிறந்து வாழ்ந்தவர். பெரும் செல்வந்தராக காணப்பட்ட அருணகிரிநாதர் தனது வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகள் காரணமாக உலக வாழ்வை முடித்துக் கொள்ள முற்பட்ட போது முருகப்பெருமான் காட்சியளித்து தடுத்தாட்கொண்டு அவரது நாவில் ‘சரவணபவ’ எனும் ஆறெழுத்து மந்திரத்தை தனது வேலினால் எழுதினார். அந்த நொடியில் ஞானம்பெற்ற அருணகிரிநாதர் முருகப்பெருமானை துதிக்க முதலாவதாக பாடிய பாடல் பக்திச் சுவையும் கந்த சுவையும் மிக்கதாக காணப்படும் ‘முத்தைத்தரு பத்தித் திருநகை.... என்கின்ற பாடலாகும்.இப்பாடல் அழகன் குமரன் முருகப்பெருமானால் அடியெடுத்துக்கொடுக்கப்பட்ட பாடலாகும் .

தேன்சுவையூறும் திருப்புகழில் 1307 இசைப்பாடல்கள் உள்ளதோடு இவற்றுள் 1088க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு சந்த வேறுபாடுகள் உள்ளதாக கணித்து இருக்கிறார்கள். திருப்புகழை தேவாரம் திருவாசகம் போல் பஞ்ச புராண முறையிலான மந்திர நூலாக நாள்தோறும் முருகப்பெருமானை போற்றிப் புகழ்பாடும் நூலாகவும் முருகன் மீது பக்தி கொண்டோர் பின்பற்றும் நூலாகவும் கொள்கின்றனர்.

திருப்புகழில் உள்ள இசைத் தாளங்கள் இசை நூல்கள் எதிலும் அடங்காத தனித்தன்மை பெற்றவையாகும். வேல் விருத்தம், மயில்விருத்தம், வேல்வகுப்பு, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருப்புகழ் என்பன அருணகிரிநாதரால் பாடப்பட்ட நூல்களாகும். இவற்றுள் திருப்புகழில் காப்புச்செய்யுள், விநாயகப்பெருமானைதுதிப்பதாக காணப்படுவது சிறப்பு என்பதுடன் அருணகிரிநாதரால் பல ஈழத்து தலங்களும் பாடல் பெற்றுள்ளது. குறிப்பாக நல்லூர் கந்தவனகடவை செல்வச்சந்நிதி பறாளை கதிர்காமம் போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் கதிர்காம கந்தனை துதித்து பாடிய ‘இறவாமல் பிறவாமல்’ எனும் திருப்புகழ் கந்த சஷ்டி விரத காலப்பகுதிகளில் ஆலயங்களில் பக்தியுடன் பராயணம் செய்யப்படுவது சிறப்பம்சமாகும்.

முருகனின் திருவருளால் அருணகிரிநாதரின் வாக்கில் வந்த பாடல்கள் திருப்புகழானது இளம் தலைமுறையினருக்கு சமயக்கல்வியில் பிடிப்பையும்இ பக்தியையும் ஏற்படுத்தும் நோக்கிலும் எதிர்காலத்தில் ஒழுக்கமும்இ பண்பாடும் மிக்க இளம்சமுதாயத்தினை கட்டியெழுப்பும் நோக்கிலும் பாரம்பரிய மருகிப்போன கலாசார மேம்பாட்டுக்கு புத்துயிர் கொடுக்கவும் பெற்றோர்கள் சைவசமய ஆசான்கள் சைப்பாடசாலைகள் என்பவற்றுக்கு வலுவூட்டும் வகையிலும் எதிர்வரும் கந்தசஷ்டி நாட்களில் முருகப்பெருமானின் புகழ் பாட திருப்புகழ் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கொக்குவில் இந்துக் கல்லூரி தாக்குதல் உயிர்தப்பிய பெண்ணின் திகில்அனுபவம்

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்-24 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட போது எனக்கு 13 வயது.சம்பவத்தில் எனது ஒரேயொரு அக்கா பரமேஸ்வரன் மனோன்மணி உயிரிழந்ததுடன் அக்காவின் ஒன்பது மாதப் பெண் குழந்தையான மாலினியும் அநியாயமாக உயிரிழந்தது.அக்காவின் இன்னொரு மூன்று வயது மகளான மகளுக்கு உடல் முழுவதும் காயங்களும், காலில் பெரும் காயங்களும் ஏற்பட்ட நிலையில் சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் நாங்கள் தேடிச் சென்ற போது பிணக் குவியலுக்கு மத்தியிலிருந்து எங்களை நோக்கி வந்த அக்காவின் மகளை மிகவும் அச்சமான சூழலில் சிரமங்களுக்கு மத்தியில் மதிலேறிப் பாய்ந்து கொண்டு சென்று வீட்டில் வைத்து மருத்துவம் செய்து காப்பாற்றினோம் என மேற்படி சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பிய தாவடியைச் சேர்ந்த திருமதி.புவனேஸ்வரி நகுலேஸ்வரன் தனது திகில் மிக்க அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்திய இராணுவத்தால் கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் விபரிக்கையில்,

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பொதுமக்கள் தங்கியிருந்த கட்டடங்கள் மீது இந்திய இராணுவம் தாக்குதல் நடாத்தும் போது நானும் இங்கிருந்தேன். தாக்குதலின் பின்னர் கண்ணீர்ப் புகை போன்று இருட்டுப் புகை அடித்த காரணத்தால் எங்களுக்கு மற்றவர்களை அடையாளம் காண முடியாத நிலையேற்பட்டது. இராணுவத்தின் தாக்குதலுக்குப் பயந்து உயிர் தப்பிய மக்கள் உணவேதுமின்றிப் பாடசாலைக்குள் ஆங்காங்கே ஒழிந்திருந்தார்கள். மூன்று நாட்களின் பின்னர் தேடுதல் நடாத்திய போது தான் அக்காவும், அவாவின் ஒன்பது மாதக் குழந்தையும் உயிரிழந்தது தெரிய வந்தது. உயிருடனிருந்த ஏனையவர்களை ஒருவாறு கண்டறிந்தோம். அக்காவின் மகள் மாலினியைத் தேடிச் சென்ற போது பிணக் குவியலுக்கு நடுவிலிருந்து இரத்தம் தோய்ந்த உடலுடன் ஓடி வந்து எங்களைக் கட்டிப் பிடித்து அழுத போது தான் வவி (மாலினி) தானென அடையாளம் கண்டு கொண்டோம்.

அதன்பின்னர் ஆமிக்காரன் தரச் சொல்லியும் ஒப்படைக்காமல் ஒருவாறு மதிலேறிக் கொண்டு சென்று தான் அக்காவின் மகளுக்கு வீட்டில் வைத்துத் தாவடியைச் சேர்ந்த பேரானந்தராஜா டாக்டர் மூலம் மருத்துவம் செய்தோம். உடல் முழுவதும் காயங்களால் பெரிதும் அவதிப்பட்ட அக்காவின் மகள் உயிர் தப்ப மாட்டா என்று தான் நாங்கள் நினைத்திருந்தோம்.

எனினும், அவா ஒருவாறு உயிர் தப்பித் தற்போது லண்டனில் வசிக்கிறா. இந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கும் போதே திகில் மிக்கதாகவும், மறக்க முடியாததாகவும் உள்ளது என்றார்.

**(தமிழின் தோழன்)**






# தீபாவளி தினத்தன்று அனைவரது வாழ்விலும் இன்ப ஒளி பெருகட்டும்



இயன்றவரை எம்மை அணுகும் எல்லோர் இல்லங்களிலும் இருள் அகல அறப்பணிகள் தொடரும் என அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் கொடை வள்ளல் வாமதேவன் தியாகேந்திரன்( தியாகி) தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சமூகப் பணியே எமது முதற்பணி. எல்லோருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துகள் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஏழை மக்கள் பாரிய துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆகவே இல்லையென்று வருபவர்களுக்கு இரந்து கொடுங்கள் அவ்வாறு செய்வோமாயின் அவர்களின் வாழ்வில் இருள் அகன்று தீப ஒளி பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

அனைவருக்கும் இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

# யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மீது யாழ். தொழிலதிபர் பகிரங்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி மீது தொழிலதிபர் வாமதேவ தியாகேந்திரன் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

அவரது யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகே இருந்த சுபாஷ் ஹோட்டலில் ஓலையால் வேய்ந்த இரண்டு கொட்டகைகள் இருந்தன.

அது எல்லாவற்றையும் கழற்றி கூரை வேலை, நிலவேலை என அனைத்து வேலைகளையும் செய்து முடித்து, அந்த இடம் பச்சைப் பசேலென இருக்கவேண்டும் என்பதற்காக மில்லியன் கணக்கிலான நிதியை செலவழித்து தோட்டம் எல்லாம் அமைத்தேன்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் சொல்கிறார்கள் அந்த இடம் குத்தகைக்கு எடுத்த இடம் என்றும், தற்போது அந்த இடத்தினை மீள விட்டோம் என்று. இதனை நினைக்கும் போது மிகவும் கவலையாக உள்ளது.

இதனை பார்க்கும் போது ஏனைய இடங்களுக்கு உதவி செய்யும்போது கூட பயமாக இருக்கிறது. ஏனென்றால் அங்கும் இப்படியான பிரச்சினைகள் வருமா தெரியாது என்பதால்.

இப்போது அனைத்தையும் விசாரித்து தான் நான் செய்கிறேன். யாழ்ப்பாணம் நாவற்குழியில் பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்துக் கொடுக்கவுள்ளேன். அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகவுள்ளது.

ஒருவர் என்னை வந்து கேட்டார், வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் வழங்குவதற்கு தயாராக உள்ளோம். அதனை நாங்கள் உங்கள் ஊடாக செய்ய விரும்புகின்றோம் என்று. நான் அவர்களுக்கு கூறினேன், நான் யாரிடமும் பணத்தினை வாங்கி செய்வதில்லை. ஆனால் அதற்கான ஏற்பாடு செய்து தருகிறேன் என்று.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்திக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு குறித்த விடயத்தை தெரியப்படுத்தினேன்.

அவர் தான் கூட்டத்தில் இருப்பதாகவும், பின்னர் என்னை தொடர்புகொள்வதாகவும் கூறினார். நான் அவரது அழைப்புக்காக காத்திருந்தேன்.

ஆனால் அவரிடமிருந்து அழைப்பு வரவில்லை. பின்னர் நான் மட்டக்களப்பில் உள்ள வைத்தியசாலைக்கு அந்த உதவித்திட்டத்தை ஏற்பாடு செய்து வழங்கிவிட்டேன். அவர்கள் தொடர்ந்து அந்த வைத்தியசாலைக்கு தான் இனி செய்வார்கள்.

நானும் சுதன் என்ற இளைஞனும் இணைந்து அண்மையில், இந்தியாவில் உள்ள பிரபல தொலைக்காட்சி ஒன்றில் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த கில்மிஷா, மலையகத்தை சேர்ந்த அஷானி மற்றும் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும் தமிழ்நாட்டை சேர்ந்த பிள்ளைகளுக்கு மில்லியன் கணக்கிலான நிதியை வழங்கியுள்ளோம்.

நாங்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டினை என்னுடன் வந்த சுதன் என்பவரே ஒழுங்கமைத்தார்.

நாங்கள் இலங்கையில் இருந்து வருகின்றோம் என்று தெரிந்ததும் நடுவர்கள் உட்பட அனைவரும் எழுந்து நின்று எங்களுக்கு மரியாதை செலுத்தினார்கள். அது எமக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது.

மலையக சிறுமி அஷானிக்கு அமைச்சர் உட்பட பலர் உதவிகளை செய்வதாக கூறினார்கள். அந்த கிராமத்தையே தத்தெடுப்பதாக ஒருவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் உதவி செய்திருந்தால் கோடிக்கணக்கான நிதி அந்த சிறுமிக்கு சேர்ந்திருக்கும். ஆனால் அந்த சிறுமியின் கணக்கினை பரிசீலித்து பார்க்கும் போது அந்தளவுக்கு எதுவும் கிடைக்கவில்லை. அந்த சிறுமியின் பெயரை வைத்துக் கொண்டு வேறு சிலர் பயனடைகின்றார்கள்.

அண்மையில் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் நடாத்தப்படும் இசை நிகழ்ச்சிக்கு நிகரான நிகழ்ச்சி ஒன்றினை யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடாத்தவுள்ளேன்.

அந்த நிகழ்ச்சியில் அனைத்து வயதுப் பிரிவினரும் கலந்துகொள்ளலாம். இரண்டு சுற்றுக்கள் மூலம் திறமைசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு இறுதியில் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

உதவி தேவையானவர் என்னிடம் வரலாம். உண்மையில் உதவி தேவையுடைய வர்களுக்கு எந்த நேரமும் உதவி செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இலுப்பைக்குளத்தில் புத்தர்சிலை



திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர்சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப்பகுதியில் இன்று (06) காலை பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப் பட்டிருந்தது.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் 09.09.2023 அன்று குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜ மஹாவிகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

## தமிழ்ச்செல்வனின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல்

# த.தே.ம.முன்னணியினால் அனுஷ்டிப்பு





தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (02.11.2023) மாலை-05.30 மணி முதல் கொக்குவில் கிழக்கில் உள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்ச்செல்வனின் உருவப்படத்திற்கு முன்பாக ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி திருமதி.வாசுகி சுதாகரன், கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி.கிருபா கிரிதரன், கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நினைவுரைகள் நிகழ்த்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் மூத்த எழுத்தாளரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமான மு.ஈழத்தமிழ்மணி மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இலங்கைக்கான சில தூதுவர்கள்

# யாழ்.பாதுகாப்பு படை தலைமையகத்திற்கு விஜயம்

பங்களாதேஷ், பெல்ஜியம், ஐரோப்பிய ஒன்றியம், கியூபா, எகிப்து, இத்தாலி, நேபாளம், பாகிஸ்தான், கிரிட்டன் மற்றும் வட அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர் மற்றும் இந்தியக் ஆகிய நாடுகளுக்கான புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான பத்து புதிய தூதுவர்கள் சிறப்பு நோக்கு நிலை நிகழ்ச்சியாக யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டனர்.

வருகை தந்த தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஆர்.கே ஹெட்டியரச்சி ஆர்டப்ளியுபீ ஆர்எஸ்பீ வீஎஸ்வீ யுஎஸ்பீ என்டியு பீஎஸ்சீ அவர்களால் அன்புடன் வரவேற்கப் பட்டனர்.

அதன் பின்னர், வடக்கிலுள்ள முப்படைத் தளபதிகளுக்கும் வருகை தந்தவர்களுக்கும் இடையிலான விரிவான விளக்கமளிப்பு மற்றும் கலந்துரையாடலின் போது, வட மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை, சிவில் இராணுவ ஒத்துழைப்பு, சமூக நலத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி உதவி மற்றும் நல்லிணக்கத் திட்டங்கள் குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

வடமாகாண முப்படைகளின் தளபதிகள், பிரதான பதவி நிலை அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சம்பந்தனின் பதவி துறப்பு விவகாரம்:

# கட்சிக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்



இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்புரிமையை துறக்க வேண்டுமென சுமந்திரன் கூறிய விடயம் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் (05.11.2023) வவுனியாவிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட பிரமுகர் ஒருவர் ஊடகமொன்றுக்கு இந்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கூட்டத்தில் சுமார் 15 மத்தியகுழு உறுப்பினர்களே கலந்து கொண்டிருந்தனர். சேனாதிராசா கூறுகையில், சுமந்திரனின் ஊடகப் பேட்டி சலசலப்பை ஏற்படுத்தியிருந்ததாகவும், அது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில் அந்த பேட்டியில் இரா.சம்பந்தன் பற்றிய தவறான கருத்து உருவாகி விடக்கூடாது என்பதற்காகவே அப்படி பேசியதாக சுமந்திரன் விளக்கமளித்தார். இருந்தாலும் அவரது பதில் தேவையைற்றது அதை தவிர்த்திருக்கலாம் என நாடாளுன்ற உறுப்பினர் சிறீரதன் தெரிவித்தார்.

இதை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் சுமந்திரனுக்கு இடையில் சிறு விவாதம் ஏற்பட்டது என அந்த பிரமுகர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிறீதரன் பேசிய போது மட்டக்களப்பில் நடந்த சம்பவமொன்றை சுட்டிக்காட்டினார். பொன் செல்வராசாவின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்டத்தின் தலைமையை 32 வயதான இளம் நாடாளுமன்ற உறுப்பினரின் கைகளில் ஒப்படைத்து விட்டே அவர் காலமாகியதாக பேசினார்.

அது தவறான கருத்து. அப்படி செல்வராசா ஒருபோதும் சொன்னதுமில்லை. இப்படியெல்லாம் இல்லாததையெல்லாம் ஏன் பேசுகின்றீர்கள். அவரது இறுதிக்கிரியையில் சுமந்திரன் இப்படி பேசினார். அந்த கிரியைக்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினரே வரவில்லை.

இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட 10 பேராவது இது பற்றி என்னிடம் சுட்டிக்காட்டினார்கள் என சிறீதரன் தெரிவித்ததற்கு உடனே சாணக்கியன் அந்த 10 பேரில் 5 பேரை எனக்கு தெரியும் என்றார். அதேநேரம் தான் பட்டிருப்பு தொகுதியின் தலைமையை ஏற்க வேண்டுமென பொன். செல்வராசா அண்ணர் விரும்பியிருந்தார் என சாணக்கியன் கூறியதாகவும் அந்த பிரமுகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

# யாழ். உணவகத்திலிருந்து மோடிக்கு கடிதம் எழுதினால் மட்டும் போதாது

## வரதராஜபெருமாள் நக்கல்



இலங்கை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை முடுக்கிவிட வேண்டும் என்று ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஏ.வரதராஜபெருமாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவையில் ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில், 1983-87 காலப்பகுதியில் இலங்கையின் தமிழ் கிளர்ச்சிக் குழுக்களும் கட்சிகள், புதுடெல்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்திய தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்ததை, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈபிஆர் எல்எப்) முன்னாள் தலைவர் வரதராஜப் பெருமாள் நினைவு கூர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விருந்தகத்தில் இருந்து கொண்டு, பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினால் மட்டும் பலன் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

1983 மற்றும் 1990 க்கு இடையில் உரிய விடயங்களை செய்ய முடியவில்லை என்றாலும், தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கத்திற்கும் பொறுப்பு உள்ளது. இலங்கை தமிழர் தீர்வு விடயத்தில் இந்திய அரசாங்கம், தனித்து செயல்பட முடியாது. அதற்கு இந்திய மக்கள் மற்றும் தலைவர்களின் ஆதரவு தேவை.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் கொடுக்கப்பட வேண்டும். புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும். எனவே, முதன்மைப் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை 13 வது திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த விஷயத்தை ஆய்வு செய்ய இந்திய அரசாங்கம் சட்ட வல்லுநர்கள் குழுவை அமைக்க வேண்டும். அத்துடன் திருத்தத்தின் 'சரியான செயல்படுத்தலை' எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதை இலங்கைக்கு தெரிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் வாழும் இலங்கை ஏதிலிகள்; தொடர்பான பிரச்சினையை மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டும்.

இந்தியக் குடியுரிமைக்கான கோரிக்கை கடைசியாகக் கருதப்பட்டாலும், முதலில் கவனிக்கப்பட வேண்டிய 'அழுத்தமான சிக்கல்கள்' இருக்கின்றன.

இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ முறையான வேலைவாய்ப்பை பெற விரும்புபவர்களுக்கு இந்திய அரசாங்கம் தனித்தனியாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாகவோ நிரந்தர ஆவணங்களை வழங்க முடியும்.

அதேபோல், ஏதிலிகளுக்கு வீட்டு வசதிக்காக சொத்து வாங்கும் உரிமையை வழங்க முடியும். முகாம் ஏதிலிகள் இலங்கைக்கு வருவதற்கான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

# மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறல் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்




வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் 2450வது நாளாக சுழற்சி முறை போராட்டத்தினை முன்னெடுக்கப்படும் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்னால் குறித்த ஆர்ப்பாட்டமானது இடம்பெற்றிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களினை ஏந்தியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் வடகிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம் எமது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எங்களின் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை, தமிழர்களின் நிலத்தை அபகரிப்பது ஒரு மீறலாகவே கருதப்படுகிறது. இலங்கையின் இணைத்தலைமை நன்கொடை நாடுகள் அரசியல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து தீர்வை வழங்குவது அது அவர்களின் பொறுப்பு. பயனற்ற 13வது திருத்தம் குறித்து இந்தியாவின் நண்பர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் விவாதிக்கின்றனர். எவ்வாறாயினும், சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் கூட்டுப் படைகளால் எமது நிலங்கள் மற்றும் மீன்பிடி நீரைக் கைப்பற்றுவது பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு வலுவான முதுகெலும்பு தேவை. இலங்கை மீதான இந்தியாவின் நடத்தை தற்போது தாழ்வு மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. இந்திய அமைச்சர்கள் பிக்குகளுக்கும், போர்க் குற்றவாளி ராஜபக்சேக்களுக்கும் தலைவணங்கும் விதம் அவர்களின் தாழ்வு மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. இந்து கோவில்களை இடிப்பவர்களையும் இந்துக்களை கொலை செய்ய சொல்லும் பிக்குகளையும் இந்து இந்தியர்கள் ஏன் தலைவணங்குகிறார்கள்.

அதனால்தான் நாங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியை நாடுகிறோம். அவர்களின் வெளியுறவுக் கொள்கை வலிமையையும் உறுதியையும் காட்டுகிறது.

நாங்கள் ஒப்புக்கொள்கிறோமோ இல்லையோ, உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கில் அமெரிக்கா எடுத்த துணிச்சலான நடவடிக்கைகள் அவர்களின் உறுதியை நிரூபிக்கின்றன.

தற்போதைய நிலைமை குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு ஒரு கேபிளை அனுப்ப அமெரிக்க தூதரை நாங்கள் கடுமையாக ஊக்குவிக்கிறோம். இத்தீவின் மீதான அந்நிய ஆக்கிரமிப்பு பிரச்சினைக்கு தீர்வு காண தமிழர்களுக்கு இறையாண்மை வழங்கப்பட வேண்டும். சீனர்கள் தமிழர் தாயகத்தில் வந்துவிட்டால், அவர்களை வெளியேறச் செய்வது கடினம். ஆப்பிரிக்கா மற்றும் கரிபியன் தீவுகளைச் சுற்றிப் பாருங்கள், இங்கேயும் அதுவே நடக்கிறது.

சீனர்களைப் பற்றி நாம் குறிப்பிட விரும்புகிறோம். சீனாவின் மனித உரிமைகள் பதிவுகள் மற்றும் . பேச்சு, கருத்து, மதம் மற்றும் பலவற்றின் சுதந்திரம் மீறப்படுவதாக அறிக்கைகள் காட்டுகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்தி வருகிறது, இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையின் தென்பகுதியில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் கவலைக்குரிய முக்கிய பகுதிகளில் ஒன்றாகும். சீன நிதியில் கட்டப்பட்ட இந்த ஆழ்கடல் துறைமுகம், அதன் மூலோபாய இடம் மற்றும் சாத்தியமான இராணுவ தாக்கங்கள் காரணமாக புருவங்களை உயர்த்தியுள்ளது.

இந்த துறைமுகம் சீனாவால் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று வாதிடப்படுகிறது, இது புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சில புவிசார் அரசியல் கவலைகளை எழுப்பியுள்ளது என தெரிவித்தனர்.

# காஸா இனவழிப்பு தொடர்பான ரணிலின் கூற்று

## வட- கிழக்கில் நாங்களும் செய்தோம் என்ற ஒப்புதல் வாக்குமூலம்

## கோ.கருணாகரம் சாடல்

ஹாசாவில் இஸ்ரேல் நடத்தும் மனித உரிமை மீறும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் மேற்குலகம் எமது நாட்டின் மீது மட்டும் மனித உரிமை தொடர்பான பிரச்சினைகளை கேள்விக்குட்படுத்தும் காரணம் என்ன? என ஜனாதிபதி அண்மையில் கோரியதன் மூலம் இன்று ஹாசாவில் இஸ்ரேல் செய்துவரும் இன அழிப்பையே அன்று நாங்களும் வடகிழக்கில் செய்தோம். இன்று இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்குலக்கு அன்று நாம் செய்தவற்றைக் கண்டிப்பதற்கு தார்மீக உரிமை இல்லை என மறைமுகமாக ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது உரையில் மேலும் தெரிவிக்கையில்

எமது நாட்டுக்குக் கிடைத்துள்ள கடல் வளம் உலகில் எந்த நாட்டுக்கும் கிடையாதது. எமது கடற் பரப்பு கடல் வாழ் உயிரினங்கள் வளர்வதற்கேற்ற தட்ப வெப்ப சு10ழ்நிலை கொண்டது. எமது கடற்கரையைச் சுற்றி கடல்வாழ் உயிரினம் வாழ்வதற்கேற்ற கண்ட மேடையும் உள்ளது. கடல் சு10ழ்ந்த நாடுகள் அனைத்திலுமே இத்தகைய ஒரு பௌதீகச் சு10ழல் இருப்பதில்லை. உலகில் எந்த நாட்டுக்கும் கிடையாத நன்னீர் வளமும் எமது நாட்டுக்குக் கிடைத்திருப்பது எமக்குக் கிடைத்த பெரும் பொக்கிசமாகும். இவ் வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்துகின்றோமா? இவ் வளங்களின் பயன்பாடு மூலம் எமது நாடு வளம் பெறுகிறதா? என்று எம்மை நாமே வினாவினால் வருகின்ற விடை பூச்சியமே.

இந்த வளம் மாத்திரமல்ல இது போன்ற எல்லா வளமும் நிரம்பிய நாடு எமது நாடு விவசாயத்துறையை எடுத்துக் கொண்டால் நெல் உற்பத்தியில் தன்நிறைவு கண்ட நாடு. இதற்கு முதல் கால்கோளிட்டவன் குளம் தொட்டு வளம் பெருக்கிய பராக்கிரமபாகு மன்னன். ஆனால் இன்று அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை எமக்கு பண்ணை விவசாயம் செய்து விலங்கு வேளாண்மையில் தன்நிறைவு காணவேண்டிய நாம் இன்று விலங்கு உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவலம். முட்டையைக்கூட அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய பரிதாபம் எமக்கு. இவை யாவற்றுக்கும் காரணம் என்ன? ஊழலும் மக்கள் நலன் கருதாத அரசுமே இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

1996 சட்டம் அதற்குக் காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் துறைசார் அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட வர்த்தமானி வெளியீடுகள் துறைசார் அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் இதுவரை நாம் அடைந்த பயன் என்ன என்ற கேள்விக்குறியோடு இன்று இச் சட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தமும் ஏதேனும் பயனை எமது நாட்டுக்கும் மக்களுக்கும் தந்துவிடுமா.? அவ்வாறு அத்தகைய சட்டங்கள் மூலம் எம் மக்கள் உரிய பயன் பெறுவதற்குரிய இயலுமையை இந்த அமைச்சும் இந்த அரசாங்கமும் கொண்டிருக்கிறதா என்ற ஐயம் எனக்கு இன்னும் உள்ளது. எனது சிந்தனை எதிர்மறையாக உள்ளது என யாரும் நினைக்க வேண்டாம். எமது நாட்டின் கடந்த கால அனுபவம் என்னை அவ்வாறு நினைக்கத் தூண்டுகிறது. அங்கு இங்கு எங்கும் போக வேண்டாம். ஆகக் குறைந்தது எமது அண்மையிலிருக்கும் மாலைதீவிலிருந்து இவ்விடயங்கள் தொடர்பாக நாம் ஏன் பாடங்களைக் கற்றுக்கொள்ளக்கூடாது. குறைந்த பட்சம் வட கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளையாவது நன்னீர் வளங்களையாவது வட கிழக்கு மக்கள் முறையாகப் பயன்படுத்த அனுமதித்தால் கூட நாட்டின் முழுத் தேவையை இல்லாவிட்டாலும் இவ்வளங்கள் தொடர்பான முக்கால் வாசித் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய



தைரியமும் மனத்திடமும் இயலுமையும் வட கிழக்கு மக்களிடமுண்டு. ஆனால் இவை தொடர்பான வட கிழக்கு வளங்கள் யாவும் தென்னிலங்கையாலும் அயல் நாடுகளாலும் கபளீகரம் செய்யப்படுகிறது. இதற்குரிய நிவாரணங்களை எம் மக்கள் எமது அரசியலமைப்பு வழங்கிய உரிமைகளுக்கமைவாக எடுத்துக் காட்டினால் அவர்கள் பயங்கரவாதிகள் அவர்கள் பிரிவினைவாதிகள் எனக் கருதுவதே எமது நாட்டின் வரலாறு. இதற்கான தண்டனைகளை அனுபவிப்பதே எமது வட கிழக்கு மக்களின் தலைவிதி.

கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. இதற்கான நல்லதொரு உதாரணம் கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாததும் மாறி மாறி வந்த ஆட்சியாளர்களினதும் மாறி மாறிப் பதவியிலிருந்த அரச உயர் அதிகாரிகளினதும் மறைமுக ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் அளவீடு செய்து வர்த்தமானி மூலம் மயிலத்தமடு - மாதவணையில் மேய்ச்சல் நிலமாக ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு இன்று நடைபெறும் சம்பவங்கள் தகுந்த உதாரணங்களாகும். எமது மாவட்ட மக்கள் இந் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பதற்கு இந்த மேய்ச்சல் தரை நிலம் முக்கியமானதாகும். பண்ணை உற்பத்தியில் பாரிய பங்களிப்பினை நல்குவதற்கும் இந்த மேய்ச்சல் தரை நிலம் முக்கியமானதாகும். தசாப்தங்களுக்கு மேலாக இம் மேய்ச்சல் தரையால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு மட்டங்களில் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கா நிலையில் சமூக ஆர்வலர்கள் அரசியல் கட்சிகள் அதன் தலைவர்கள் அனைவரும் இணைந்து எமது நாட்டின் ஜனாதிபதி அவர்களோடு உயர் மட்டப் பேச்சுகளை அண்மையில் நடத்தினர்.

எமது ஜனாதிபதியும் இது தொடர்பாக எமது மக்களுக்குச் சாதகமான பதிலைக் கூறியதாக ஓரளவுக்கு மகிழ்ந்தோம் என்பது உண்மைதான். ஆனால், இவ்வளவும் நடந்த பின்னரும் எங்கிருந்தோ கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராக வந்த முன்னாள் ஆளுநரும் மட்;டக்களப்பு அடாவடிப் பிக்குவும் புத்தர் சிலை வைத்து எம் மக்களின் வாழ்வுரிமையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளார்கள். இந்த விபரம் தற்போது ஏறாவூர் நீதிமன்றத்தில் உள்ளதாகவும் அறிகின்றேன்.

கடந்த மாதம் ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது மேய்ச்சல் தரைப்பிரச்சினை தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்ப்பதற்காக எமது அரசியலமைப்பின் 14ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் கீழ் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். இது ஒன்றும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியோ, அல்லது அறகலய போன்ற ஆட்சியாளர்களை விரட்டும் போராட்டமோ அல்ல. பாதிக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதி அவர்கள் பயணிக்கும் போது வீதியின் இரு மருங்கிலுமிருந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த இருந்தனர். இதற்காக ஜனாதிபதி தனது பயணப்பாதையை மாற்றவேண்டிய தேவை அங்கு எழவில்லை. ஆனால் அன்று நடந்தது என்ன? ஜனாதிபதி தனது பயணப் பாதையை மாற்றினார். அரசியலமைப்பில் வழங்கப்பட்ட உரிமைகளின் அடிப்படையில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்திய சமூக ஆர்வலர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் இன்று நீதிமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வழக்கினை எதிர் நோக்கியுள்ளனர். இதில் இன்னும் ஓர் விநோதம் என்னவென்றால் அன்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாத பல தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்களுக்கும் எதிராக இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடுத்து தமது சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பாரிய பொறுப்பை எமது பொலிஸ் படையினர் நிறைவேற்றியுள்ளனர்.

நான் மேலும் கூறுவதென்னவென்னால் வட கிழக்கில் பணியாற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒவ்வொரு வருடத்திலும் குறிப்பிட்ட சில மாதங்கள் தெரியும். அம் மாதங்களில் குறிப்பிட்ட சில திகதிகளும் தெரியும். வட கிழக்கில் குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பிட்ட சில அரசியல் கட்சிப் பிரமுகர்கள், குறிப்பிட்ட சில சமூக ஆர்வலர்களது பெயர்களையும் பட்டியலோடு வைத்திருக்கின்றார்கள். இவர்கள்

> **எமது நாட்டை இன்று ஆள்வது யார்? ஆளும் கட்சிக்கே தாம் தான் ஆளும்கட்சியென்று புரியாத அவல நிலை. இன்று நம் நாட்டின் ஜனாதிபதியை விரட்டுவோம் வரவு செலவுத்திட்டத்தைத் தோற்கடிப்போம் என்று எதிர்க்கட்சிகள் கோசமிட்ட காலம் போய் ஆளும் கட்சியினரே இவ்வாறு கோசமெழுப்புவது சாதாரணமாகியுள்ளது.**

அனைவரும் அந்த மாதங்களை அந்தத் திகதிகளை மறந்தாலும் எமது கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக்க நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப் பாதுகாக்கும் பொலிசார் அந்த மாதங்களை திகதிகளை ஞாபகப்படுத்திவிடுவார்கள். இதற்காக முன்கூட்டியே கலந்து கொள்ள நினைக்காதவர்களின் பெயரிலும் கூட தடையுத்தரவினைப் பெற்றுவிடுவார்கள். எனக்குக் கூட இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ளது.

நீதிமன்றத் தடையுத்தரவை மீறி நினைவேந்தல் நிகழ்வொன்றில் பங்குபற்றியதாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக கொக்கட்டிச்சோலைப் பொலிசாரால் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இத்தனைக்கும் எனக்கு எவ்வித நீதிமன்றத் தடையுத்தரவும் கிடைக்கப்பெறவில்லை. இருந்தாலும் என்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதனை சட்ட ரீதியாக நீதிமன்றத்தில் எதிர்கொள்ளத் தயாராகவேயுள்ளேன்.

ஆயுதப் போராளியாக இருந்து ஜனநாயக வழிமுறைக்கு வந்த பின்னர் எந்த ஒரு காலத்திலும் எந்த ஒரு இடத்திலும் ஏன் பாராளுமன்றத்தில் கூட எனது கருத்துக்களை, எனது முரண்பாடுகளை, எனது எதிர்ப்புக்களை சட்ட ரீதியாகவே வெளிப்படுத்தி வந்துள்ளேன். ஆனால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிசார் என் மீதும் எமது மக்கள் மீதும், சட்ட முரணாகவே நடந்து கொள்கின்றனர். 56 இனக்கலவரம், 77 இனக்கலவரம், 83 இனக்கலவரங்களின் போதெல்லாம் வெளிப்படுத்தப்படாத இன, மத முரண்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக பகிரங்க வெளியில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தமிழ் மக்களை வெட்டி, வெட்டிக் கொல்வேனென்று கருத்து வெளியிட்ட போது அவர் பொலிசாருடன் மோதும் போது அவர்களின் சீருடையை பிடித்து அசிங்கப்படுத்தும் போது, அவர்களுடைய தொப்பியைக் கழற்றி வீசும் போது, அதனை அமைதியாக ஏற்றுக் கொண்ட பொலிசார் எமது அரசியலமைப்பின் 12 ஆவது பிரிவின் முதலாம் உப பிரிவு வழங்கிய சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற கோட்பாட்டை அப்பட்டமாக மீறியுள்ளனர். இப்படியொரு செயற்பாட்டை ஒரு இந்து மதகுரு, கிறிஸ்தவ மதகுரு, ஒரு இஸ்லாமிய மதகுரு செய்திருந்தால் இதே மௌனத்தை எமது பொலிசார் கடைப்பிடிப்பார்களா?

இதேவேளை, மட்டக்களப்பு சித்தாண்டியில் மேய்ச்சற்தரைப் பிரச்சனைக்காக இடம் பெறும் பண்ணையாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வந்து அகிம்சை ரீதியாக போராட்டமொன்றை நடத்தினார்கள். ஆனால், இந்தப் பிக்கு செய்யும் அடாவடிகளை பார்த்துக் கொண்டிருக்கும் பொலிசார் அமைதியான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மாணவர்களை சிறைப்பிடித்து நீதிமன்றத்தின் முன்நிறுத்தி சிறையில் அடைக்கின்ற கைங்கரியத்தினையே செய்துள்ளனர். இவ்வாறாயின் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாடு இந்த நாட்டில் இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

எமது நாட்டை இன்று ஆள்வது யார்? ஆளும் கட்சிக்கே தாம் தான் ஆளும்கட்சியென்று புரியாத அவல நிலை. இன்று நம் நாட்டின் ஜனாதிபதியை விரட்டுவோம் வரவு செலவுத்திட்டத்தைத் தோற்கடிப்போம் என்று எதிர்க்கட்சிகள் கோசமிட்ட காலம் போய் ஆளும் கட்சியினரே இவ்வாறு கோசமெழுப்புவது சாதாரணமாகியுள்ளது.

எமது ஜனாதிபதி அவர்கள் ஒரிரு நாட்களின் முன் மேற்குலக நாடுகளுக்கு அறைகூவல் ஒன்று விடுத்தார். ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை போன்றவற்றுக்கு மேற்குலக நாடுகள் வரும் போது பரிசுத்தமான கரங்களுடன் வரவேண்டுமென்றுரைத்தார். எமது ஜனாதிபதி அவர்களது புலமை, திறமை தொடர்பாக எனக்கு மதிப்புண்டு. ஆனால், இந்தக் கருத்தினை வெளியிடும் போது அவர் மறைமுகமாக எமது நாட்டில் நடைபெற்ற இனப் படுகொலையினையும், இனச் சுத்திகரிப்பினையும் ஏற்றுக் கொள்கின்றார் என்று கருதக் கூடியதாக இருக்கின்றது. ஹாசா யுத்தத்தில் இஸ்ரேல் நடத்தும் மனாதாபிமானமற்ற மனித உரிமை மீறும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணான நடவடிக்கைகளுக்கு தமது ஆதரவினை நல்கும் மேற்குலகம் எமது நாட்டின் மீது மட்டும் மனித உரிமை தொடர்பான பிரச்சினைகளை கேள்விக்குட்படுத்தும் காரணம் என்ன? எனக் கோரியதன் மூலம் இன்று ஹாசாவில் இஸ்ரேல் செய்துவரும் இன அழிப்பையே அன்று நாங்களும் வடக்கு கிழக்கில் செய்தோம். இன்று இஸ்ரேலை ஆதரிக்கும் நீங்கள் அன்று நாம் செய்த செயலை கண்டிப்பதற்கு உங்களுக்கு தார்மீக உரிமை இல்லை என குறிப்பிடுவதன் மூலம் இஸ்ரேலும் நாமும் ஒன்றையே செய்தோம் என மறைமுகமாக ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# வாழ்வைச் செம்மைப்படுத்தும் தீபாவளிப் பண்டிகை

தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை. அதாவது தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமான இறைவனை வழிபடும் புண்ணியத் திருநாளே தீபாவளிப் பண்டிகை.

தீபாவளிப் பண்டிகை தத்துவம் நிறைந்ததாகவும், ஒழுக்கவியல் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைந்துள்ளது. சைவ சமயம் தன் பண்பாட்டை ஒழுங்குபடுத்தப் பல்வேறு முறையியல் தன்மைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் பண்டிகைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ் வகையில் தீபாவளிப் பண்டிகையும் சிறப்புப் பெறுகின்றது.தீபம் வெறும் விளக்கு அல்ல. வாழ்வின் கலங்கரை விளக்கு. தீங்ககற்றிச் சுடரச் செய்யும் பேரொளியால் கலக்கம் அகற்றும் தன்மை கொண்டது.

புராணங்களை எடுத்து நோக்கினால் கிருஷ்ணன் கொடூரமான ஆட்சி செய்த நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது அந்த நரகாசுரன் தான் இறக்கும் தினத்தை

**செல்வநாயகம் ரவிசாந்**

மக்கள் கொண்டாட வேண்டும் என்று கிருஷ்ணனிடம் வேண்டிக் கொண்டதாகவும், நரகாசுரனை வதம் செய்து அறம் வெல்லும் என்ற உண்மையை இறைவன் ஞாபகம் ஊட்டிய நாளே தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையை ஆண்ட இராவணன் சீதையைக் கடத்திச் சென்று வைத்திருந்த நிலையில் இராமன்



இராவணனை எதிர்த்துப் போராடி இராவணனை அழித்து விட்டுச் சீதையை மீட்டுத் தன் தம்பியான இலட்சுமணனுடன் அயோத்திக்குச் சென்ற போது அங்கு வாழ்ந்த மக்கள் இராமனை வரவேற்பதற்காக தத்தமது வீடுகளில் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதனாலேயே இந் நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது என இராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

சக்தியின் 21 நாட்களைக் கொண்ட விரதமான கேதாரகௌரி விரதம் முடிவுற்றதும் அந் நாளன்று சிவன் சக்தியை தனது பாதியாக ஏற்றுக் கொண்டு அர்த்தநாரீஸ்வரர் ஆக உருவெடுத்தமையால் தீபாவளி கொண்டாடப்படுவதாக ஸ்கந்த புராணத்தில் கூறப்படுகிறது.

தீபாவளியன்று அதிகாலையில் இந்துக்கள் எல்லோரும் நீராடுவர். தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும், அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக முதுநூல்கள் கூறுகின்றது.

எங்களுடைய இளம் சமூகத்தினர் ஆன்மீகம்,கலை,பண்பாடு,கலாசாரம் ,விழுமியம் முதலானவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடிய சூழலை அனைவரும் ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் அவர்களின் மனம் விருத்தியடைவது மட்டுமல்ல நிம்மதியான, ஆனந்தமான வாழ்வை இளம் வயதிலேயே அனுபவிக்கக் கூடியவர்களாக, வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் மாறக் கூடிய நிலை உருவாகும்.

ஈழத்தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சுமூகமானதாக மாற்றுவதற்கு அரசாங்கமானது எஞ்சியிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்ய வேண்டும், இராணுவத்தின் பிடியிலிருக்கின்ற தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகள் உடனடியாக மீளவும் கையளிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் நடந்தது என்ன? என்



பதை அவர்களின் உறவுகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி வட- கிழக்கில் அதிகரித்துவரும் திட்டமிட்ட பௌத்த- சிங்கள ஆக்கிரமிப்புக்கள் தொடராது முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும். இந்த விடயங்களைச் செயற்படுத்துவதற்கு தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அவசியமானது.

வடக்கு- கிழக்குத் தமிழர் தாயகத்தில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்தவும், தவறான தற்கொலை முடிவுகள் நீண்டு செல்வதைத் தடுக்கவும் முறையான வேலைத் திட்டங்களும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டியதும் காலத்தின் தேவை என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

உலகவாழ் இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாகக் கருதப்படும் தீபாவளிப் பண்டிகை எதிர்வரும்-12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது. தீபாவளித் திருநாளில் அனைவரும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதுடன் மூத்தோரை வணங்கி அவர்களின் ஆசி பெற வேண்டும். இந்நாளில் பகைவர்களும் தம் பழைய கோபங்களை மறந்து சகோதரத்துவத்துடன் வாழ முனைகின்றனர்.அவ் வகையில் இது வெறும் பண்டிகையாக மட்டுமல்லாது வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஓர் நிகழ்வாகவும் அமைகின்றது.

நம்மிடமுள்ள ஒரு தீய பழக்க வழக்கத்தையாவது தீபாவளித் திருநாளில் விட்டுவிடுவதாக நாம் தீபாவளித் திருநாளில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். நம்மைச் சூழ்ந்திருக்கின்ற இருள் அகல வேண்டும். எல்லோரது வாழ்விலும் ஒளி ஏற்பட வேண்டும் என்பதே எம் ஒவ்வொருவருடையதும் பிரார்த்தனையாகவிருக்க வேண்டும். இருளிலிருந்து விடிவுபெற்ற நாளாகிய தீபத் திருநாளில் அகத்தில் நல்லவற்றை எண்ணி நலமே வாழ அனைவரும் திட சங்கற்பம் கொள்வோம்.

# பாகிஸ்தானை எதிர்த்து காஷ்மீருக்காக ஐ.நா.வில் களம் இறங்கிய பெண்

காஷ்மீர் பிரச்சனை என்பது காஷ்மீர் மாநிலம் மீது இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே நிலவி வரும் நில உரிமை தொடர்பான பிரச்சனைகளைக் குறிக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்று வரை இது தீர்க்கப்படாத பிரச்சனைகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

காஷ்மீர் சமவெளியை மௌரியர்கள் கி மு 322 முதல் கி மு 185 முடியவும்; குசானர்கள் கி மு 30 முதல் கி பி 375 முடியவும்; காபூல் இந்து சாகிகள் கி பி 500 முதல் 1010 முடியவும் லெகரா இந்து அரச குலத்தினர் 1003 முதல் 1320 முடியவும் ஆண்டனர்.

பின்னர் தில்லி சுல்தான்கள், முகலாயர்

**அஞ்சு அபிராம்**

களும், இறுதியாக காஷ்மீர் இந்தியாவுடன் இணைப்பதற்கு முன் வரை தோக்ரி மொழி பேசும் இராசபுத்திர இந்து மன்னர்கள், பிரித்தானிய இந்தியாவின் மேலாண்மையை ஏற்ற பகுதியாக ஜம்மு காஷ்மீர் இராச்சியத்தை ஆண்டனர்.

காஷ்மீரில் புத்தமதத்தை பின்பற்றுவோர் வாழ்ந்து வரும் நிலையிலும் இந்து மதத்தை பின்பற்றுவோரே அதிகம் வாழ்ந்து வருகின்றனர் . தற்போது புத்த மதத்தவர்கள் குறைவாகவும் இஸ்லாமிய மதத்தை சாந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதும், அதனைத் தொடர்ந்து போர் அல்லது இராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் அவ்வப்போது இரு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதும், பன்னாட்டு அமைப்புகள் தலையிட்டு இந்த பிரச்சினையை தீர்த்து வைக்க முயற்சிகள் செய்வது தொடர்ந்தாலும் காஷ்மீர் சர்ச்சை இன்று வரை தொடர்கிறது.

பாகிஸ்தானின் வேஷத்தை களைந்து தஸ்லீமா..

இவ்வாறான நிலையில் காஷ்மீர் பள்ளத்தாக்கைச் சேர்ந்த இளம் பெண் சமூக ஆர்வலரான தஸ்லீமா ஜெனிவாவில் கடந்த மாதம் நடைபெற்ற 54 ஆவது ஐநா மனித உரிமைகள் கவுன்சில் பாகிஸ்தான் காஷ்மீர் தொடர்பில் மிகைப்படுத்தும் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் நேரடியாகக் களம் இறங்கினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது;

தஸ்லீமா அக்தர், ஒரு சமூக-அரசியல் ஆர்வலர் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றின் அப்பட்டமான வளர்ச்சி வேறுபாடுகளை




வெளிப்படுத்தினார். காஷ்மீர் பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்காக உருமாற்ற மாற்றங்களை கொண்டு வரும் அதே வேளையில் பாகிஸ்தான் மக்கள் அங்குள்ள மக்கள் மற்றும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் வசதிகளை முற்றிலும் புறக்கணித்து பாகிஸ்தான் அரசாங்கத்தின் தயவில் வாழ்கின்றனர்.

காஷ்மீர் பகுதியில் அமைதி மற்றும் செழிப்பைக் கொண்டு வருவதோடு, உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் மத்திய அரசு முதலீடு செய்து வரும் நிலையில், பாகிஸ்தான் தனது அடிப்படை நிதிக் கடமைகளை நிறைவேற்ற முடியாமல் திணறி வருகிறது. பாகிஸ்தான் கல்வித் துறையில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கிறது, கட்டிடங்கள் மற்றும் கூரைகள், சுத்தமான தண்ணீர், கழிப்பறைகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள் இல்லாததால் மாணவர்களுக்கு கடுமையான சிரமங்களை ஏற்படுத்துகிறது.

இதன் விளைவாக கடுமையான இடைநிற்றல் விகிதம் ஏற்படுகிறது. சுகாதாரத் துறையிலும் மாற்றம் காணக்கூடியதாக உள்ளது.

மக்கள் தொலை தூரப் பகுதிகளிலும் தேசிய சுகாதாரத் திட்டங்களுடன் சுகாதார நலன்களைப் பெறுகின்றனர், இது பாகிஸ்தானின் மக்களுக்கு தொலைதூரக் கனவாக உள்ளது.

ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்களுக்கு ஒரு குடும்பத்திற்கு அமெரிக்க டொலர் 6,000 வரை உலகளாவிய சுகாதார காப்பீட்டை வழங்குகிறது.

சுமார் 20 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு பொறுப்புக்கூறலை அமைப்பதில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவமான சபையை நான் வலியுறுத்துகிறேன் என்றார்.

# அழிவின் விளிம்பில் பாலஸ்தீன ஊடகங்கள்:

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஜெருசலேமில் நடந்த மிகப்பெரிய பாலஸ்தீனிய இறுதிச் சடங்கு இது என்று நம்பப்படுகிறது.

ஆனாலும் அவரது இறுதிச் சடங்கின் போது இஸ்ரேலிய காவல்துறை அதிகாரிகள் கிழக்கு ஜெருசலேமில் உள்ள செயின்ட் ஜோசப் மருத்துவமனையில் கையெறி குண்டுகளால் தாக்கினர்.

மருத்துவமனையையே தாக்கிய இஸ்ரேலிய பொலிசார் நோயாளிகளை தாக்கினர் தள்ளி மிதித்து கையெறி குண்டுகளை வீசினர். மருத்துவ ஊழியர்களை காயப்படுத்தி தீக்காயங்களை உருவாக்கினர். தற்போதய போர்ச்சு10ழலில் 26 அக்டோபர் 2023 அன்று அவர் கொல்லப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட ஒரு நினைவுச்சின்னம் இஸ்ரேலிய இராணுவத்தால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டது.

**காசாவில் கொலையான ஊடகர்கள்:**

காசா பகுதிபோரின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன. அக்டோபர் 7இல் முகமது அல்-சால்ஹி நான்காவது அதிகாரச் செய்தி நிறுவனத்திற்கான புகைப்படப் பத்திரிக்கையாளர் மத்திய காசாவில் உள்ள பாலஸ்தீனிய அகதிகள் முகாமுக்கு அருகாமையில் சுடப்பட்டார். அதே நாளில் முகமது ஜார்கோன்ஸ்மார்ட் மீடியாவுடன் இணைந்த ஒரு பத்திரிகையாளர் ரஃபாவின் கிழக்கே உள்ள ஒரு பகுதியில் மோதல் குறித்து செய்தி வெளியிட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.அக்டோபர் 7 இல் இப்ராஹிம் முகமது லாஃபிஜன் மீடியாவின் புகைப்படக் கலைஞர் ஈரெஸ் கடக்கும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அசாத் ஷாம்லாக் அக்டோபர் 8இல் ஒரு ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர் தெற்கு காசாவில் ஷேக் இஜ்லினில் உள்ள அவர்களது வீட்டில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்களுடன் கொல்லப்பட்டார்.

## சிங்கள மக்களின் தலைவனாகவே ரணில் தன்னை காட்ட முயல்கிறார்

அதிபர் ரணில் விக்ரமசிங்க எல்லையின்றி தமிழர்களின் அபிலாசைகளை கபளீகரம் செய்ய துணிந்துள்ளார் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீட்பர் என அவர் சார்ந்த வட்டாரங்கள் புகழாராம் சூடினாலும் புள்ளிவிபர ரீதியாக மாற்றம் எதுவும் நிகழவில்லை. மாறாக நாட்டின் கடன் அதிகரித்த வண்ணமே உள்ளது எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

அதிபரின் ஒவ்வொரு தீர்மானங்களும் தமிழர்கள் சார்ந்த பிரச்சினைகளை திசை திருப்புவதாகவும் அதற்கான தீர்வுகளை பலவீனப்படுத்துவதாகவும் அமைந்து வருகின்றது.

ரணிலின் எதேச்சதிகார போக்கை இராஜதந்திர ரீதியாக சமநிலைப்படுத்த தமிழர் தரப்பில் ஆளுமையான துணிச்சலான தலைமை தமிழ் கட்சிகளில் இல்லை என்பது வேதனையான விடயம். அத்துடன் தமிழ் புத்திஜீவிகள் தரப்பில் பலமான குரல் இல்லை. புலம்பெயர் தரப்பிலும் வறிதாகவே உள்ளது.

அத்துடன் தன்னை சிங்கள பௌத்த மக்களின் தலைவனாக காட்டவே முயற்சிக்கின்றார். அண்மையில் ஐரேம்மன் ஊடகத்திற்கு கொடுத்த நேர்காணல் இதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது.

தமிழர் தரப்பு பழைய பல்லவிப் போராட்டங்களை அறிவிப்பதும் அதன் மூலம் தமிழ் கட்சித் தலைமைகள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்துவதும் பலவீனப்பட்டு விரக்தி நிலையில் உள்ள மக்களின் வெறுப்பை அதிகரிப்பவர்களாகவும் மாறி உள்ளனர்.

இது தமிழ்த் தேசிய இருப்புக்கு சாதகமில்லை மிக ஆபத்தானது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு பதிலாக அதை விட மேலும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவர அதிபர் முயற்சிக்கின்றார்.

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் தென்னிந்திய மீனவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடும் வடக்கு மீனவர்களுக்கு தீர்வு காணப்படாமல் தென்னிந்திய மீனவர்கள் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபட ரணில் அரசாங்கம் அனுமதி வழங்க இருப்பதாக கூறும் அறிவிப்பு மேலும் வடக்கு மீனவர்களை நெருக்கடிக்கு தள்ளும் ஏற்கெனவே இருந்த பிரச்சினைக்கு தீர்வு இல்லாமல் இரட்டி மடங்காக்கும்.

தமிழர் தரப்பு மக்கள் ஆணையில் இருந்து ஒரு படி கீழிறங்கி சமஷ்டி தீர்வுக்கு முன்பாக அரசியல் அமைப்பில் உள்ள பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதனை எதிர்பாக்காத ரணில் அதற்கும் ஒரு ஆப்பு வைத்தார். காவல்துறை அதிகாரம் தரமுடியாது என கூறினார். உண்மையில் அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரத்தை நாடாளுமன்ற முடிவு இல்லாமல் நினைத்தவுடன் அதிபர் தரமாட்டேன் என கூற முடியாது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகாரி போல செயற்பட்டுள்ளார். தமிழர் தாயகத்தில் சட்டவிரோத காணி அபகரிப்பு, விகாரைகள் அமைத்தல் , சிங்கள குடியேற்றங்கள் அமைத்தல் , மேய்ச்சல் தரைகள் அபகரித்தல் போன்றன கடந்த காலத்தை விட தற்போது வேகமாக நடைபெறுகின்றன.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் சகல மக்களின் பிரச்சினைகளையும் நியாயமான முறையில் பார்க்க வேண்டிய அதிபர் பெரும்பாண்மை சிங்கள மக்களின் தலைவராக தன்னை காண்பிக்க முயற்சிக்கும் சம நேரம் தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் விரிவுபடுத்தி திசை திருப்ப முயற்சிக்கின்றார்.

இச் செயற்பாடுகள் தொடருமாயின் தமிழ் மக்களின் அபிலாசைகள் மேலும் பலவீனம் அடையும் அபாயம் ஏற்படும். என்றார்.

## இந்தியா– சீனாவின் பலப்பரீட்சைக் களமாக பாக்கு நீரிணை மாறுமாயின்

ஈழத்தமிழினத்தின் வாழ்வும் வளமும்மிக்க பாக்கு நீரிணை இந்தியா மற்றும் சீனாவின் பலப்பரீட்சைக் களமாக மாறுமாயின் முதலில் அழிவது ஈழத்திமிழர்கள்தான். நாங்கள் அதனை ஒருபோதும் கைகட்டி வேடிக்கை பார்க்க போவதில்லை என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் இந்தியா சீனாவின் ஆதிக்க நிலை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்துசமுத்திர அதிகாரப்போட்டியில் மையப்புள்ளியாகும் பாக்கு நீரிணையும் தமிழர்களின் வாழ்வாதாரமும் 99 வருட ஒப்பந்த அடிப்படையில் அம்பாந்தோட்டையை கையகப்படுத்திய சீனா தமிழர்கள் நலன்சார்ந்து செயற்படும் என நினைப்பது சிறுபிள்ளைத்தனமானது.

சீனா போன்ற ஒரு பெரிய தேசம் வடக்கில் மீன்பிடிக்க வரவில்லை. தமிழர்களின் பொருளாதாரத்தை அழித்து தமிழர்களை இடம்பெயரசெய்து பாக்கு நீரிணையை தம்வசப்படுத்தி தமிழர் தேசத்தை தமது பிராந்தியமாக்கி அதனூடக முழு இலங்கையையும், பாக்குநீரிணையின் மறுபக்கமான தமிழகத்தையும் கேரளாவையும் தமது கட்டுப்பாட்டு பிராந்தியமாக்குவதே அவர்களது பிரதான இலக்காகும்.

அதன் ஆரம்ப கட்டம்தான் வடகடல் எங்கினும் மக்கள் தமது ஜீவனோபாயமாக சிறுகடல் தொழில் மேற்கொள்ப்பட்ட பிரதேசங்களை அவர்களிடம் இருந்து பறித்து அட்டை வளர்ப்பு பண்ணைகளாக மாற்றியிருக்கிறார்கள். இன்று அட்டை வளர்க்கும் கடல்பிரதேசங்கள் தமது இயற்கை சமநிலை தன்மையினை இழந்து வருகின்றன.

அந்த பண்ணைகளில் பாவிக்கப்படும் உயர் தன்மையுடைய வெளிச்சங்களால் மீன்களின் கருக்கள் அழிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சீனாவின் நில ஆக்கிரமிப்புக்கான நகர்வுகளை எமது மக்களின் இருப்பு அவர்களின் பொருளாதாரம் எதிர்காலம் கருதி அவர்களது வருகையை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். திருகோனமலையும் பாக்கு நீரிணையும் யார் கையில் வைத்திருக்கிறார்களோ அவர்களால்தான் ஆசியாவையும் இந்துமா சமுத்திரத்தையும் கையாள முடியும்.

இதன் நிமித்தமே போர்த்துகீசர் டச்சுகாரர் ஆங்கிலேயர்கள் வந்தார்கள் வென்றார்கள் ஆண்டார்கள் சென்றார்கள். ஆனால் சீனாவின் நகர்வு வெற்றிபெறுமானால் ஒருபோதும் பாக்கு நீரிணையை விட்டு செல்லமாட்டார்கள். இந்துமாகடல் சீனமயமாகும்.

இந்தியா ஒரு மெத்தன போக்கோடு இலங்கையை எப்போதும் கையாளலாம் என எண்ணுகின்றது. அதன் வெளிப்பாடுதான் அண்மைய இந்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் இந்திய நிதி அமைச்சர்களின் வருகையின்போதும் தமிழ்த்தலைமைகள் புறக்கணிக்கப்பட்டமையாகும். பிரதமரை சந்திக்க கடிதம் அனுப்பப்பட்டும் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளமை. இந்துமா சமுத்திரத்தின் பலமான பாக்கு நீரிணையின் இரு கரைகளிலும் ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் கேரளமும் தங்கியுள்ளமையே இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு உத்தரவாதமாகும்.

ஈழத்தமிழினத்தின் வாழ்வும் வளமும்மிக்க பாக்கு நீரிணையில் இந்திய சீன பலப்பரீட்சை களமாக மாறுமாயின் முதலில் அழிவது ஈழத்திமிழர்கள்தான் அதனை ஒருபோதும் கைகட்டி வேடிக்கை பார்க்க போவதில்லை என்பதனை வலுவாக பதிவு செய்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

## வடக்கு கடலை சீனாவிற்கு வழங்க தீவிரம் காட்டும் இலங்கை

**ஊர்காவற்துறை கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.**

**அவர் மேலும் தெரிவித்த போது,**

**அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமனிடம் வடக்கு கடற்றொழில் சமூகத்தின் சார்பில் முக்கிய கோரிக்கையொன்றை முன்வைத்தோம்.**

**இலங்கையின் கடற்றொழில் திணைக்களத்தினால் எமது வளங்களும் வாழ்வாதாரங்களும் சீனாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் எமது இருப்பே கேள்விக்குறியாகியுள்ளது. கடற்றொழில் திணைக்களமும் சீனாவும் சேர்ந்து வடக்கு கடற்றொழிலாளர்களை கடலைவிட்டு அந்நியப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இதனால் எமது நாட்டில் எமது கடலில் குறிப்பாக வடகிழக்கு கடற்பரப்பில் நாங்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபட்டு, எமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாதளவிற்கு சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.**

**வடக்கு கடலில் அதிகரித்துள்ள சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி எமது கடலில் நாங்கள் இறைமையுடன் வாழ்ந்து தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்திய அரசாங்கத்திடமும் பாரதப் பிரதமரிடமும் பல தடவைகள் கோரினோம்.அதே கோரிக்கையை இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்களிடம் முன்வைத்திருக்கின்றோம்.**

**எங்கள் தொப்புள் கொடி உறவாக தமிழ் நாடு இருக்குமென்ற அடிப்படையில் இந்தியா முன்வந்து எமது வடக்கு கடலில் ஏற்பட்டுள்ள சீன ஆதிக்கத்தை குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.**

**அதே போன்று தமிழ் நாடு மற்றும் இந்தியாவிற்கும் எமக்கும் இடையிலுள்ள தொப்புள் கொடி உறவுக்கு தடையாகவுள்ள தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த சுமார் 2500 ற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகளினால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.குறித்த இழுவைப்படகு மீனவர்களால் எமது வடக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.**

**அந்த நடவடிக்கை என்பது 2016 ஆம் ஆண்டு நவம்பர் 05ஆம் திகதி டெல்லியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டு நாடுகளும் இழுவைமடித்தொழிலை முற்றாக நிறுத்தவதற்கு இணக்கம் காணப்பட்டது.**

**அதனடிப்படையில் இந்த விவகாரத்தை முன்னெடுத்துச் சென்று இந்திய இழுவைப்படகுகளினால் எமது கடல்வளமும் எமது வாழ்வாதாரமும் அழிக்கப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**வடக்கு கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியினால் தமிழ் நாட்டிற்கும் வடக்கு மீனவர்களுக்கும் இடையில் பிரச்சினையாக காட்டி இலங்கை அரசாங்கமும் கடற்றொழில் திணைக்களமும் மீனவர்களைத் திசை திருப்பி விட்டு மறுபக்கமாக சீனாவைக்கொண்டு வந்து எமது முற்றத்தில் நிறுத்தும் செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். இவ்வாறு சீனா எமது வடக்கு கடற்பரப்பில் நுழைவதற்கு தமிழ்நாடு புதுச்சேரியை சேர்ந்த 2500ற்கும் இழுவைப்படகுகளின் அத்துமீறலே காரணமாக இருப்பதாக உணர்கின்றோம்.**

**எனவே குறித்த இழுவை படகுகளின் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடியை நிறுத்தி,வடக்கு.கிழக்கு கடற்றொழிலாளர்களை சீனாவின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென,தொப்புள்கொடி உறவுகள் என்ற அடிப்படையில் நாம் தயவாகக் கேட்டுக்கோள்கின்றோம்.**

**இதற்கு இந்தியா அரசாங்கமும்,பாரதப் பிரதமரும் உரிய முக்கியத்துவம் கொடுத்து எம்மை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் குறித்த சந்திப்பில் தெரிவித்தார்.**

## தமிழ்த் தேசிய இளையோரை இலக்கு வைக்கும் அரசாங்கம்

தமிழர்களின் புனித மாதமான கார்த்திகை மாதத்தில் எமது இளைஞர், யுவதிகளை குறிவைத்து விசாரணைகள் முடக்கி விடப்படுவதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தற்போதைய நாட்கள் தமிழ் மக்களுக்கு மிகவும் ஆபத்தானவை என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்

அண்மைக்காலமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் இளைஞர்களையும் சமூக செயற்பாட்டாளர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் கைது செய்து அவர்களை குற்றப்புலனாய்வு மற்றும் இராணுவப் புலனாய்வு ஊடாக விசாரணை என்ற பெயரில் மிக மோசமான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதனுடைய ஒருகட்டமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையினுடைய ஆசிரியர்,ஊடகவியலாளர்கள் உட்பட வெளியில் இருக்கின்ற பலரை ஸ்ரீலங்கா அரசு விசாரணை என்ற பெயரில் கைது நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதை அண்மைய காலப்போக்குகள் காட்டி வருகின்றன.

மேலும் அதேபோல தமிழர் தாயகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றதுயிலும் இல்லங்களின் பணிக்குழு தலைவர்களையும் ஸ்ரீலங்கா புலனாய்வாளர்கள் விசாரணைக்கு அழைத்து வருகின்றார்கள். இதுபோல் ஏனைய தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் அண்மைக்காலமாக விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இது அரசாங்கத்தினுடைய கையாலாகாத தனத்தை காண்பிக்கின்றது.

குறிப்பாக கார்த்திகை மாதம் என்பது தமிழர்களது உணர்வோடு சேர்ந்த மாதம், தமிழீழத்தில் தங்களுக்காக தங்களுடைய இன்னுயிர்களை மண்ணுக்காக தியாகம் செய்தவர்களை நினைவில் கொள்கின்ற மாதம் அவ்வாறான கார்த்திகை மாதத்திலே பல்லாயிரம் மக்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கான நினைவேந்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது அவற்றை அச்சுறுத்தம் வகையில்தான் அரசாங்கம் இந்த செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றது.

தான் ஒரு லிபரல்வாதி என அடையாளம் காட்டிக்கொள்கின்ற இந்த நாட்டினுடைய ஜனாதிபதி நிலைமாற்று காலநீதிப்பொறிமுறையின் அடிப்படையில் வணக்கங்கள் செலுத்துவதற்கு தடையில்லை என கூறிக்கொண்டு அண்மைய நாட்களில் அமெரிக்காவிற்கு சென்று அங்குகூட நான் எல்லா வணக்க முறைகளுக்கும் வாசலை திறந்து விட்டிருக்கின்றேன்.தமிழ் மக்களை அரவணைத்து செல்கின்றேன்என்று சொல்கின்ற ஜனாதிபதியினுடைய பாதுகாப்புத் துறையின் படைகளும் மிக மோசமாக இளைஞர்களையும் யுவதிகளையும் ஊடகவியலாளர்களையும் சமூக செயற்பாட்டாளர்களையும் விசாரணைக்கு அழைத்திருப்பதென்பது ஒரு பயங்கரமான செயற்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நாட்டினுடைய ஜனநாயகம் மரணித்து, நீதி மரணித்து நாடு ஒரு சிங்கள பௌத்த இனத்துக்குரிய ஒரு நாடாக, அல்லது அவர்களால் கையாளுகின்ற ஒரு நாடாக ஏனைய இனங்கள் வாழமுடியாத பன்முகத்தன்மையில்லாத ஒரு நாடாக தன்னை அடையாளப்படுத்தி செல்வதையே அண்மைக்காலப் போக்குகள் மிகத் தெளிவாக காட்டுகின்றது.











**தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!**

இப்பத்திரிகை 10.11.2023 அன்று அகரவ் பப்ளிசிங் & மீடியா பிறின்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.